விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
கிளை நூலகம்
Registered as a Newspaper In Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 09 வெள்ளிக்கிழமை (25.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 249

# அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை


## மகிந்த ஆதரவு 39 எம்.பிக்கள் கையெழுத்திட்டனர்

*(கொழும்பு)*

***சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் 39 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.***

இந்தப் பிரேரணையில் மகிந்த ஆதரவு அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 39 பேர் கையொப்பமிட்டுள்ளனர்.

ஆனால் இந்தத் தீர்மானத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கையொப்பமிடவில்லை. 23☛



### தொடரும் மரணங்கள்

### சுன்னாகத்தில் ரயில் மோதி இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி சென்றுகொண்டிருந்த புகையிரதம் யாழ் சுன்னாகம் புகையிரத நிலை 24☛

### பயிற்சியின் போது மயங்கி விழுந்த கடற்படை வீரர் பலி

(யாழ்ப்பாணம்)

பயிற்சியின் போது மயங்கி விழுந்த கடற்படை வீரர் ஒருவர் இரண்டு நாட்களின் 24☛

### இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை பகுதியில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியள 23☛

### குடும்பப் பெண் தீயில் எரிந்து பலி

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்கு உள்ளான குடும்பப் பெண் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பல 23☛

### சுமுகமாக நடந்தது வடக்கு மாகாணசபை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் புதிய அமைச்சரவையுடன் மாகாண சபையின் அமர்வுகள் மிக அமைதியான முறையில் நடைபெற்றுள்ளன. வடக்கு மாகாண சபையின் 103 வது அமர்வு நேற் 23☛

## தேர்தல் திருத்த சட்டமூலம் இன்று வாக்கெடுப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல் திருத்த சட்டமூலத்தின் வாக்கெடுப்பை இன்றைய தினம் நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று நாடாளுமன்ற கட்டிடத்தில் கூடிய கட்சித் தலைவர்கள் இதற்கான முடிவை எடுத்துள்ளனர்.

ஏற்கெனவே இந்த திருத்தம் தொடர்பில் ஆராய வேண்டியிருப்பதால் வாக்கெடுப்பை தாமதிக்குமாறு ஒன்றிணைந்த எதிர்க்கட்சி கோரிக்கையை விடுத்திருந்தது.

எனினும் இன்றைய தினம் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று ஜே.வி.பி கோரியது.

இன்று வாக்கெடுப்பு இடம்பெற்று செப்ரெம்பர் 15க்கு முன்னர் 23☛

### 20-வது திருத்தச் சட்டமூலம்

## வடக்கு முதல்வரின் அறிவிப்பு மத்திய அரசுக்கு நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

அரசியல் அமைப்பின் 20-வது திருத்தச் சட்ட மூலத்திற்கு அங்கீகாரம் வழங்குவதா? இல்லையா? என்பது தொடர்பில் ஆராய்வதற்காக எதிர்வரும் நான்காம் திகதி வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வு கூடவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 103-வது அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போது வடக்கு மாகாண சபைக்கு ஆளுநரால் அனுப்பி வைக்கப்பட்ட 20-வது திருத்தச் சட்டமூலம் அனைத்து 24☛

## மனித உரிமை விடயங்களில் இலங்கையின் முன்னேற்றம்?

### தெளிவுபடுத்தக் கோருகிறது மன்னிப்புச்சபை

(லண்டன்)

மனித உரிமைகள் விடயங்களில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை வெளிப்படுத்துமாறு ஐ. நா மனித உரிமைகள் பேரவை அழுத்தம் கொடுக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்பு சபை கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வு ஜெனிவாவில் செம்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில் சர்வதேச மன்னிப்பு சபை இலங்கை தொடர்பான தீர்மானங்கள் உள்ளடக்கிய இறுதி அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பித்துள்ளது.

அவ்வறிக்கையில் இலங்கை இதுவரை காலமும் செயற் 23☛

## கூட்டமைப்பு எழுதிய கடிதம் தமிழ் மக்களை ஏமாற்றும் செயல்

### கஜேந்திரகுமார் கடும் சாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அரசியல் தீர்வில் சர்வதேசம் தலையிட வேண்டும் என கோரி தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு அண்மையில் அனுப்பப்பட்டதாக கூறப்படும் கடிதத்தின் முழு வடிவத்தினை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெளியிட வேண்டும் என தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இது தேர்தலுக்காக மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக தமிழ் தலைமைகளால் மேற்கொள்ளப்படும் பொய்பிரசாரம் 23☛

### பேறிவாளனுக்கு கிடைத்தது பிணை



(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 24☛

### பண்ணைக் கடலில் விபத்து

## நாவாந்துறை இளைஞன் கடலில் மூழ்கி பரிதாபமாக உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணை, குருசடி தீவு அந்தோனியார் ஆலயத்துக்கு சென்ற வேளை படகு கவிழ்ந்து நீரில் மூழ்கியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்ததுடன், அவருடன் சென்ற ஒன்றரை வயது குழந்தை உட்பட 5 பெண்கள் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாவாந்துறை சென்மேரிஸ் கோவிலடியை சேர்ந்த குயின்சன் தேவதாஸ் (வயது 28) என்பவ 24☛

### உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள

## அரசியல் கைதிகளின் உடல்நிலை பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் மூவரில் 2 பேரின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்ட காரணத்தினால் நேற்றைய தினம் சிறைச்சாலையில் அமைந்துள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2009 ஆண்டு கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அர 24☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தனின் திருவிழாவில் பணியாற்றிய பொலிஸார் வழிபாடு செய்வது வழமை

## தமது குறை நிறைகளையும் தேவஸ்தானத்திடம் கேட்டறிவர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்றுமுன்தினம் 23ஆம் திகதி நடந்த பொலிஸாரின் வழிபாடு என்பது காலாகாலமாக நடக்கும வழமை என தேவஸ்தான வட்டாரம் தெரிவித்துள்ளது.

ஆலய மஹோற்சவ காலமான 26 தினங்கள் சேவையில் ஈடுபட்ட பொலிஸார், வைரவர் மடை அன்று காலை 09.00 மணிக்கு நல்லூா முருகனை தரிசித்து ஆலய பிரதம குருவிடம் ஆசி பெற்று விடைபெறுவது ஒரு வழமை.

இது இந்த வருடம் மட்டுமல்ல, காலாகாலமாக நடக்கின்ற நிகழ்வு. இதற்காக விசேட பூசை வழிபாடுகள் எதுவும் ஏற்பாடு செய்யப்படுவதில்லை.

மாறாக அனைத்து அடியார்களும் செய்யக்கூடிய வழிபாட்டையே கடமையில் ஈடுபட்ட பொலிஸாரும் செய்வர்.

அதேநேரம் மஹோற்சவ நிறைவு வேளையில் தமது சேவையின் நிறைகுறைகள் பற்றி தேவஸ்தானத்திடம் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் கேட்டறிந்து கொள்கின்ற நடைமுறையும் உண்டு.

அந்த நடைமுறையே இம்முறையும் நடந்தது. இவ்வருடம் நல்லூர் மஹோற்சவம் மிகச் சிறப்பாக நடந்ததுடன் குறிப்பிடத்தக்கதான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை.

தமது பணி தொடர்பில் குறை நிறைகளை கேட்டறிந்த பொலிஸாரிடம், இவ் வருடம் சிறப்பாக மஹோற்சவம் நடைபெற்றது எனவும் அனைத்துச் சேவைகளும் திருப்தியாக இருந்தது எனவும் தேவஸ்தானத்தால் அவர்களுக்கு கூறப்பட்டது என்றும் தேவஸ்தான வட்டாரம் தெளிவுபடுத்தியுள்ளது.

இதேவேளை இவ்வருடம் நல்லூர் கந்தனின் மஹோற் சவத்தைக் காண புலம்பெயர் தமிழ் மக்கள் அதிகமாக வருகை தந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. (ந)

# உரும்பிராய் வாள்வெட்டு சந்தேக நபர்கள் கைது!

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய்ச் சந்தியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வாள்வெட்டுச் சம்பவம் கடந்த 22 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளதுடன், தப்பிச் சென்ற சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் யாழ். உரும்பிராய்ச் சந்தியிலுள்ள சிகையலங்கரிப்பு நிலை யத்தில் பணியாற்றும இளைஞர் ஒருவரை கொடூரமாக வாளால் வெட்டியுள்ளதுடன் சிகையலங்கரிப்பு நிலையத்தையும் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் இளைஞன் படு காயமடைந்துள்ளதுடன், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞரிடம் கோப்பாய்ப் பொலிஸார் சம்பவம் தொடர்பான வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர்.

இளைஞனின் வாக்குமூலத்திற்கமைய மூவரைக் கைது செய்த கோப்பாய்ப் பொலிஸார் சந்தேகநபர்களைப் பொலிஸ் காவலில் தடுத்து வைத்துத் தீவிர விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (மு-11)

## 11 தமிழ் இளைஞர் கடத்தல் தஸநாயக்கவின் மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

11 தமிழ் இளைஞர்கள் கடத்தல் சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி தஸ்நாயக்கவுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி வரை இவரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பிதஸநாயக்கவை கடந்த ஜூலை மாதம் 12ஆம் திகதி குற்ற விசார ணைப் பிரிவினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-11)


# கண்ணீர் அஞ்சலி



எமது வேலணைப்பிரிவு
நன்னடத்தை
உத்தியோகத்தர்
**பசுபதி ஐங்கரன்**
அவர்களின் தந்தையார்
**இளையவன்**
**பசுபதி**
அவர்கள் 24.08.2017
அன்று அமரத்துவம்
அடைந்ததையிட்டு அவரது
குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(சி-9424)

வட மாகாண நன்னடத்தை உத்தியோகத்தர் சங்கம்





குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பெருமையுடன் வழங்கும்
சாதாரண மனிதனை முழுமனிதனாக்கும் மனவளக்கலையின் ஆரம்ப
ஆளுமை திறனாக்கப் பயிற்சிகள்

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- காயகல்ப பயிற்சி
- எளியமுறை தியானப் பயிற்சிகள்
- அகத்தாய்வு பயிற்சிகள்

இடம்: யாழ்ப்பாணம், அறிவுத்திருக்கோவில்
காலம்: 26.08.2017 (சனி) மாலை 05.00 மணி

அகத்தாய்வு-04

26.08.2017-27.08.2017 காலை 09.00 மணிக்கு நடைபெறும். மீள்பயிற்சி அன்பர்களும் கலந்துகொள்ளலாம்

வழங்குபவர்

தமிழகத்திலிருந்து வருகைதந்திருக்கும் மனவளக்கலை பேராசிரியர்
அருள்நிதி இந்திரா சண்முகசுந்தரம அவர்கள்.

விசன்ப்னோமா

26.08.2017 காலை 09.00 மணிக்கு நடைபெறும்.

வழங்குபவர்

மனவளக்கலை பேராசிரியர்
அருள்நிதி Dr.பாலசுப்பிரமணியம அவர்கள்
அன்பர்களே வாழ்க வளமுடன்

மனைவி நலவேட்பு நாள்விழா

30-08-2017 புதன்கிழமை மாலை 05.00 மணிக்கு நடைபெறவுள்ளது.
தங்கள் வாழ்க்கைத்துணையோடு வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
0212222772,0714403268,0771235646,

வாழ்க வளமுடன
யாழ். அறிவுத் திருக்கோவில்
மனவளக்கலைமன்ற அறக்கட்டளை
இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9423)



# மரண அறிவித்தல்

## இளையவன் பசுபதி



மணற்புலம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையவன் பசுபதி 24.08.2017 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையவன் தம்பதிகளின் அன்பு மகனும், முருகேசு, கிருஸ்ணர், பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வமணியின் அன்புக் கணவரும், தவரஞ்சினி (வலி-வடக்கு பிரதேச சபை), தர்சினி (கோப்பாய் பிரதேச செயலகம்), தயானி, ஐங்கரன் (நன்னடத்தை உத்தியோகத்தர் வேலணை), சங்கீதா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிச்சந்திரன் (நியூ லம்போதரா ஹாட்வெயர் சுன்னாகம்), பாலநாதன், சந்திரன், சுஜேஸ்கா (கணக்காளர்-மாநகர சபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இரஜிவர்ணன், பிரனீவா, சரணிகா, மதுமிதா, வேணுமிதா, டோஷகா, போமிகா, விஷ்ணுகன், ஜக்ஷயா, ஜனுக்ஷயா, கிஷால், கம்ஷத் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (25.08.2017) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணற்புலம்,
அளவெட்டி

தகவல்:-
குடும்பத்தினர்

(221)



# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் ஸ்ரீஸ்கந்தராசா

(ஓய்வுபெற்ற பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்,
சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி அதிபர்,
யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி உப அதிபர்)



மிருசுவில் வடக்கை பிறப்பிடமாகவும், சங்கத்தானை மற்றும் கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் ஸ்ரீஸ்கந்தராசா நேற்று (24.08.2017) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, நடேசபிள்ளை மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், உலகேஸ்வரி, காலஞ்சென்ற அருணாசலம் ஆகியோரின் மைத்துனரும், கேதீஸ்சுரன் விவேகானந்தி, விவேகானந்தா, முருகானந்தா ஆகியோரின் சிறிய தந்தையாரும், விஜயரூபன், கிருபாரூபன், ரோகினி, விக்னவிநாயகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2017) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் கலாசாலை வீதி திருநெல்வேலியிலமைந்துள்ள வசிப்பிடத்தில் நடைபெற்று அவரது பூதவுடல் திருநெல்வேலி வடக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

3ஆம் ஒழுங்கை
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தகவல்:-குடும்பத்தினர்
0767033323, 0774940577,
0763119265

(220)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு சபையில் கவனயீர்ப்பு





(யாழ்ப்பாணம்)

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சபையின் மாதாந்த அமர்வில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.**

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமக்கு எதிரான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தக்கோரி கடந்த ஐந்து தினங்களாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற அரசியல் கைதிகள் இருபது பேருக்கு மேற்பட்டோரும் கைது செய்யப்பட்டு பலவருடங்கள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோருக்கு வவுனியா நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் ஏனைய சிலருக்கு வெளி மாவட்டங்களிலும் வழக்கு நடைபெற்று வருகின்றன. இந்த வழக்கு விசாரணைகள் மந்த கதியில் நடைபெறுவதாக கூறி.

குறித்த வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துமாறு கோரி கடந்த ஐந்து நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது தவிர குறித்த அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றில் நடைபெற்று வருகின்ற நிலையில், அந்த வழக்குகளை மீண்டும் அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டு அதனை தடுத்து நிறுத்துமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் அரசியல் கைதிகளின் உறவினர்கள் கோரிக்கை ஒன்றையும் அண்மையில் முன்வைத்திருந்தனர்.

இந்த நிலையிலேயே நேற்று வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வில் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் மேற்படி கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது. முன்னதாக இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் தொடர்பில் அவைத்தலைவரின் அனுமதியை பெற்ற சிவாஜிலிங்கம் பின்னர் சபையில் சுலோகங்களை ஏந்தியவாறு உறுப்பினர்களை போராட்டத்தில் ஈடுபடுத்தினார். பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தண்டனை பெற்ற கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குங்கள்.

அரசே! அரசியல் கைதிகளை விடுதலை செய், பயங்கரவாத தடை சட்டத்தை இரத்து செய், புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு ஆயுள் தண்டனையா? சிறைச்சாலைகளில் அரசியல்கைதிளைவைத்துகொண்டு தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமா? ஜே.வி.பி. அமைப்பில் இருந்தவர்களுக்கு 1971, 1989 களில் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

எம்மவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட முடியாதா? என எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியிருந்தனர். (இ-4)

## கடற்படைத் தளபதியுடன் பிரதமர் ரணில் சந்திப்பு



இலங்கை கடற்படையின் 21வது தளபதியாக பதவியேற்ற வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையாவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் சந்திப்பொன்று இடம் பெற்றது. இச்சந்திப்பு வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா கடற்படை தளபதியாக கடமை யேற்ற பின் பிரதமருடன் இடம்பெற்ற முதல் உத்தியோகபூர்வ சந்திப்பாகும்.

குறித்த சிநேகபூர்வ மான கலந்துரையாடலின் போது வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையாவிற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இச்சந்திப்பை நினைவு கூறும் வகையில் கடற்படை தளபதியால் பிரதமருக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. (இ-7)

## 20ஆவது அரசியலமைப்பு சீர்திருத்த வாக்கெடுப்பு ஊவா சபையில் தோல்வி

(கொழும்பு)

20ஆவது அரசியலமைப்பு சட்ட சீர்திருத்தம் தொடர்பாக ஊவா மாகாண சபையில் நடந்த வாக்கெடுப்பு தோல்வியடைந்துள்ளது.

உள்ளூராட்சி தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவது தொடர்பில் 20ஆவது அரசியலமைப்பு சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதற்கான மாகாண சபைகளின் அனுமதியை பெறுவதற்கான வாக்கெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி நேற்று நடந்த குறித்த வாக்கெடுப்பின் போது ஆதரவாக 5 வாக்குகளும் எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 7 மேலதிக வாக்குகளால் பிரேரணை தோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## முன்னாள் சபாநாயகர் சமல் வீட்டில் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர்

(கொழும்பு)

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் அறிக்கை ஒன்றை பெற்றுக்கொண்டுள்ளனர்.

வீரகொடியவில் உள்ள சமல் ராஜபக்ஷவின் வீட்டிற்கு நேற்று முன்தினம் சென்றிருந்த நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் அவரிடம் அறிக்கை ஒன்றை பெற்றுள்ளனர்.

இதில். டி.ஏ. ராஜபக்ஷ அறக்கட்டளை தொடர்பில் தகவல்களை பெறுவதற்காகவே தன்னுடைய வீட்டிற்கு நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் வந்ததாக சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

## ஞானசார தேரருக்கு விஷேட சட்டமுள்ளது

### மகிந்த கூறுகின்றார்



ஞானசார தேரருக்கு இந்த நாட்டில் விஷேட சட்டம் உள்ளது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். கொழும்பில்நேற்று இடம் பெற்ற திருமண நிகழ்வு ஒன்றில், ஞானசார தேரர் நீதிமன்ற அனுமதியின்றி ஜப்பான் சென்றுள்ளமை தொடர்பில் பிரமுகர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளிக்கும்போது. "கூட்டு எதிரணியினர் வெளிநாடு செல்ல வேண்டும் என்றால் ஆயிரம் முறை நீதிமன்றத்திற்கு ஏறி இறங்க வேண்டும். ஆனால் ஞானசார தேரருக்கு இந்த நாட்டில் விஷேட சட்டம் உள்ளது.

இந்த அரசாங்கத்தில் ஞானசார தேரருக்கு இராஜதந்திர அந்தஸ்து பெற்றுக் கொடுத்துள்ளதாக மகிந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவும் அங்கு விசனம் வெளியிட்டுள்ளார். (இ-7)

## சித்தன்கேணியில் கிணற்றிலிருந்து குடும்பப் பெண் நேற்று சடலமாக மீட்பு

### 4 நாட்களுக்கு முன் காணாமற் போயிருந்தவர் எனத் தகவல்

சித்தன்கேணி மாதர் சங்க வீதியில் ஆட்களற்ற வீடு ஒன்றின் கிணற்றிலிருந்து பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான குகதாஸன் தாரணி (வயது 37) என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த பெண் நான்கு நாட்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்தார் என வட்டுக்கோட்டைப் பொலிஸில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் அப்பகுதியில் துர்நாற்றம் வீசியதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-82)

குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை
Special Treatment for Gastric Ulcer
சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer), வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சைகளால் நிரந்தர குணம்பெறலாம்.
ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.
Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தல தோனி, புவனேஸ்வர் குமார் அபார ஆட்டம்

# போராடி வென்றது இந்தியா

### அகில தனஞ்செயவின் 6/54 பந்துவீச்சு பெறுதி வீணானது





அகில தனஞ்செயவின் சுழலில் சிக்கி 131 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை பறிகொடுத்து தோல்வியின் பிடியில் சிக்கித் தவித்த இந்திய அணிக்கு தல தோனி, புவனேஸ்வர் குமாரின் அபார இணைப்பாட்டம் (100) கைகொடுக்க இந்திய அணி 2ஆவது ஒரு நாள் போட்டியில் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 3 விக்கெட்டுக்களால் த்ரில் வெற்றி பெற்றது.

இலங்கை சென்றுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றிருந்த நிலையில்,

இரண்டாவது போட்டி கண்டி பல்லேகலே மைதானத்தில் நேற்று நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் ஹோலி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இந்திய அணியில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

இலங்கை அணிக்கு டிக்வெல, தனுஷ்க குணதிலக ஜோடி சிறப்பான ஆரம்பம் கொடுத்தது. பும்ரா 'வேகத்தில்' டிக்வெல (31) ஆட்டமிழந்தார்.

சாகல் 'சுழலில்' குணதிலக (19), குசல் மெண்டிஸ் (19) சிக்கினர். அணித் தலைவர் உபுல தரங்க 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அக்சர் பந்தில் மத்யூஸ் (20) 'பெவிலியன்' திரும்பினார். சிறிவர்தன (58) அரைசதம் கடந்தார். பும்ரா 'வேகத்தில்' கபுகெதர (40) ஆட்டமிழந்தார்.

50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 236 ஓட்டங்கள் எடுத்தது. சமீர (6), பெர்னாண்டோ (3) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் அதிகபட்சமாக பும்ரா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

மழை குறுக்கிட்டதால் போட்டி ஒரு மணி நேரம் 15 நிமிடம் பாதிக்கப்பட்டது. அதன் பின், 'டக்வேர்த் லூயிஸ்' விதிப்படி, போட்டி 47 ஓவர்களாக குறைக்கப்பட இந்திய அணிக்கு 231 ஓட்டங்கள் இலக்காக மாற்றப்பட்டது.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ரோகித், தவான் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. ரோகித் அரைசதமடித்தார். முதல் விக்கெட்டுக்காக 109 ஓட்டங்கள் சேர்த்த போது ரோகித் (54) ஆட்டமிழந்தார். தவான் (49) அரைச்சத வாய்ப்பை இழந்து வெளியேறினார்.

**சிறப்பான பந்துவீச்சு**

தனஞ்செய வீசிய 18வது ஓவரில் கேதர் ஜாதவ் (13), அணித் தலைவர் விராட் ஹோலி (4), லோகேஷ் ராகுல் (4) ஆட்டமிழக்க திடீர் சரிவு ஏற்பட்டது.

ஹர்திக் பாண்ட்யா (0), அக்சர் படேல் (6) ஏமாற்றினர். பின் இணைந்த தோனி, புவனேஷ்வர் ஜோடி நிதானமாக ஓட்டங்கள் சேர்த்தது. பொறுப்பாக ஆடிய புவனேஷ்வர் அரைசதம் கடந்தார்.

இந்திய அணி 44.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. தோனி (45), புவனேஷ்வர் குமார் (53) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் சிறப்பாக அகில தனஞ்செய 54 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களை கைப்பற்றி அசத்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கையின் அகில தனஞ்செய தெரிவானார்.

# ரொனால்டோவின் அப்பீல் தள்ளுபடி



கால்பந்து சுப்பர் ஸ்ரார் கிறிஸ்டியனோ ரொனால்டோ 5 போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டது. இந்த தடையை எதிர்த்து தொடர்ந்த வழக்கில் அவரது அப்பீல் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

போர்த்துக்கல்லைச் சேர்ந்த பிரபல கால்பந்து வீரர் கிறிஸ்டியனோ ரொனால்டோ, ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார்.

பார்சிலோனா அணிக்கு எதிரான ஸ்பானிஷ் சுப்பர் கிண்ண முதல் அரை இறுதி போட்டியில் அவர் விதிமீறி செயற்பட்டதால் நடுவர் 2 மஞ்சள் அட்டை காட்டினார்.

இதையடுத்து சிவப்பு அட்டை காட்டப்பட்டு போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டார். இதனால் வெறுப்படைந்த அவர் நடுவரை தள்ளிவிட்டார்.

இதையடுத்து அவருக்கு 5 போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டது. இந்த தடையை எதிர்த்து ரொனால்டோ அப்பீல் செய்து இருந்தார்.

ஆனால் அவரது அப்பீல் மனு தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் ரியல் மட்ரிட் அணி பங்கேற்கும் அடுத்த 5 போட்டிகளில் அவர் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# மகாதேவா சுவாமிகள் மஹா சமாதியடைந்தார்

(கிளிநொச்சி)



கிளிநொச்சி ஜெயந்தி நகரிலுள்ள மகாதேவா ஆச்சிரமத்தின் 2ஆம் குரு பீடாதிபதி ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவா சுவாமிகள் நேற்று நண்பகல் மஹா சமாதியடைந்தார்.

இவர் கிளிநொச்சியிலுள்ள சைவ நிறுவனங் கள் மற்றும் மகாதேவா சைவச் சிறுவர் இல்ல ஸ்தாபகரும் மற்றும் சைவ அன்பர்களை சைவநெறியில் தழைத்தோங்க செய்தவரும் ஆவார்.

இவரின் அளப்பெரிய சேவைகளின் காரணமாக சைவமும் தமிழும் கிளிநொச்சியில் மேலோங்கி வளர்ந்துள்ளது.

சுவாமிகளின் சமாதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தில் நடைபெறும் என மகாதேவா ஆச்சிரம நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (மு-2)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கி வந்த

# சிற்றுண்டிச்சாலைகளுக்குச் சீல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் சுகாதாரமற்ற முறையில் இயங்கி வந்த இரு பிரதான சிற்றுண்டிச்சாலைகள் யாழ்.நீதவான் நீதிமன்றின் அறிவுறுத்தலுக்கு அமைய நேற்றைய தினம் முதல் மறுஅறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அண்மைக் காலமாக சுகாதாரமற்ற உணவுகள் மற்றும் காலாவதியான உணவுகள் என்பனவற்றை விநியோகித்து வருவதாக பலரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அந்த நிலையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் சோதனை நடவடிக்கையின் போது காலாவதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக பொதுச்சுகாதார பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் மறு அறிவித்தல் வரை குறித்த இரு சிற்றுண்டிச்சாலைகளும் மூடப்பட்டுள்ளன. (இ-[illegible])


கணேசானந்த மகாதேவா சுவாமிகள்

சமாதி பிரதிஸ்டை



சைவம் வளர்த்த தவத்திரு கணேசானந்த மகாதேவா சுவாமிகள் 24.08.2017 நேற்று சமாதி அடைந்துள்ளார். சுவாமிகளின் சமாதி பிரதிஸ்டை 25.08.2017 இன்று ஜெயந்திநகரிலுள்ள மகாதேவா ஆச்சிரமத்தில் நடைபெறும் என்பதனை அறியத் தருவதோடு அன்பர்கள், அடியார்கள் அனைவரும் கலந்து சுவாமிகளின் அருள் பெற வேண்டுகின்றோம்.

தலைவர் தி. இராசநாயகம்

பணியாளர்கள், பணிப்பாளர்கள், இல்லக் குழந்தைகள்

(C-9426)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SINGER®

யாழ் FIESTA

ஓர் அற்புதமான அனுபவம்

புத்தம் புதிய பொருட்களுக்கு

50% வரை கழிவு

ஆகஸ்ட்

25 26 27

உலகத் தரம்வாய்ந்த வர்த்தக நாமங்களின் வீட்டுப்பாவனைப் பொருட்கள்
ஒரே கூரையின் கீழ் நம்பமுடியா விசேட விலைக் கழிவுடனும் சலுகைகளுடனும்

காலை 09.30 - இரவு 09.00 வரை


நுழைவு இலவசம்

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்

(அ. 9410)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஷ்ட சித்திகளை அருளும்



# ஆவணிச் சதுர்த்தி விரதம்

விநாயக விரதங்களுள் மிக விசேஷமானது இந்த விரதம். இந்துக்கள் யாவரும் விரும்பி அனுஷ்டிக்கும் விரதம்.

விநாயகர் ஆலயங்களில் சிறப்பாகவும் ஏனைய ஆலயங்களில் பொதுவாகவும் இவ் விரதநாளிலே விசேட அபிஷேகம்,பூஜை வழிபாடுகள் நிகழ்கின்றன. எனினும் இவ்விரதத்தினைப் பூஜை வழிபாடுகளுடன் இல்லங்களிலும் கைக்கொள்வது நன்று.

விநாயகப் பெருமான் உற்பவமான தினம் இது என்பர் ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தித் திதியன்று இவ் விரதம்அனுஷ்டிக்கப்பட வேண்டும். மதியவேளையில் சதுர்த்தி நிற்றல் அவசியம்.

கந்தபுராணத்தில் சிறப்பித்துக் கூறப்படும் இந்த விரதமானது சூத முனிவரால் பஞ்ச பாண்டவருக்கு உபதேசிக்கப்பட்ட பெருமையை உடையது. துரியோதனனாதி கௌரவர்களின் கொடுமையினால் பாண்டவர்கள் வனவாசம் செய்ய நேர்கிறது. காட்டிலே மிகுந்த கஷ்டமும் மனவேதனையும் அடைந்திருக்கும் நிலையில் சூத முனிவரை ஒருநாள் சந்திக்கின்றார்கள்.

அப்போது தருமர் தமது கஷ்டங்கள் நீங்கிச் சுகமாக வாழ வழிகேட்கிறார். அதற்கு வழியாக இந்த விநாயக சதுர்த்தி விரதத்தை உபதேசிக்கிறார் சூதமுனிவர். அது மட்டுமல்லாமல் இந்த விரதத்தை முன்பு அனுஷ்டித்துப் பயன்பெற்றவர்களின் வரலாற்றையும்எடுத்துக்கூறுகிறார்.

தமயந்தி நளனை மீண்டும் அடைந்ததும், கிருஷ்ணர் ஜாம்பவதியையும் சியமந்தகமணியையும் பெற்றுக்கொண்டதும், இராமன் சீதையை மீட்டதும், இந்திரன் அசுரப் பகையை வென்றதும், பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்ததும் இந்த விரத மகிமையினால் தான் என்று விளக்கினார்.

இதனைக்கேட்ட பாண்டவரும் முறைப்படி விநாயக விரதத்தைக் காட்டிலேயே அனுஷ்டித்து உரிய காலத்தில் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றனர். இஷ்ட சித்திகளைப் பெற நினைத்த காரியசித்தியைப் பெற விரும்புவோர் இவ்விரதத்தைக் கைக்கொள்ளலாம்.

அதிகாலை துயிலெழுந்து நீராடி நித்திய கர்மா அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு பிரார்த்தனை வழிபாடுகள். ஆலய தரிசனம் முதலியவற்றில் ஈடுபட வேண்டும். மதியம் ஒரு பொழுது உண்ணலாம். நல்லெண்ணெய் சேர்க்கக் கூடாது என்பது விதி. இரவு பட்டினி இருக்க முடியாதவர்கள் பால் பழம் அல்லது பலகாரம் உண்ணலாம்.

வீட்டிலே பூஜை வழிபாடுகளுடன் விரிவாக இந்த விரதமிருக்க விரும்புவோர் வீட்டிற்கு ஈசான திக்கில் பசும்சாணியால் மெழுகித் தூய்மையாக்கப்பட்டு வெள்ளை கட்டித் தயார் செய்யப்பட்ட ஓரிடத்தில் அல்லது பூஜை அறையிலே மாவிலை தோரணங்களாலும் சிறிய வாழை மரம் முதலியவற்றாலும் அலங்கரித்து அங்கு ஐந்து கும்பங்களை முறைப்படி ஸ்தாபித்து சித்த கணபதி, வித்தியா கணபதி, மோஷ கணபதி, மஹா கணபதி ஆகிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து பூஜைகளை நடத்தலாம்.

அருகிலுள்ள ஆலய அர்ச்சகரை அழைத்து இந்தப் பூஜையைச் செய்விக்கலாம். சங்கல்பத்துடன் ஆரம்பித்து பிராமண அநுக்ஜை, விக்னேஸ்வர பூஜை, புண்யாக வாசனம், பஞ்சகவ்ய பூஜை முதலிய பூர்வாங்கக் கிரியைகளிலிருந்து ஆவாஹனாதி சர்வோபசார பூஜைகளையும் செய்து தீபாராதனை நமஸ்காரங்களுடன் நிறைவு செய்யலாம்.

விஷேஷ நிவேதனங்களாக அறுசுவை உணவும், தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் என்பனவும் சொல்லப் பட்டிருக்கின்றன. நாவற்பழம், விளாம்பழம், வாழைப்பழம், கரும்புத் துண்டு, வெள்ளரிப் பழம், அப்பம், மோதகம், கொழுக்கட்டை ஒவ்வொன்றிலும் இருபத்தொன்று என்ற எண்ணிக்கையில் படைத்து நிவேதனம் செய்ய வேண்டும். (வெள்ளரிப்பழத்தை இருபத்தொரு துண்டுகளாக நறுக்கி வைக்கலாம்)

விநாயக சதுர்த்தி பூஜையில் இன்னொரு முக்கிய அம்சம், இருபத்தொரு பத்திரம், இருபத்தொரு புஷ்பம், இருபத்தொரு அறுகம்புல் என்பவற்றால் தனித்தனியாக அர்ச்சிக்கலாம். இறைவனை அவரது பலவித நாமங்களையும் சொல்லி ஓங்காரத்துடன் உச்சரித்து வணக்கம் செலுத்துவதே அர்ச்சனையாகும். ஒவ்வொரு நாமம் சொல்லும் போதும் ஒவ்வொரு பத்திரம் அல்லது புஷ்பம் சமர்ப்பித்தல் மரபு.

இவ்வித விசேஷ அர்ச்சனைக்குரிய நாமங்களும் அவற்றுக்குரிய பத்திர புஷ்பங்களின் பெயர்களும், அங்க பூஜைக்குரிய நாமங்களும், அங்கங்களும் (ஒவ்வொரு நாமங்களையும் சொல்லி மூர்த்தியின் திருவுருவத்தில் அல்லது படத்தில் அந்தந்த நாமத்துக்குரிய அங்கங்களில் பூவினால் அர்ச்சித்தல் அங்கபூஜையாகும்)

மாத சதுர்த்தி விரதம்

மாதந்தோறும் வருகின்ற பூர்வபட்ச சதுர்த்தி நாட்களும் விநாயகருக்குரிய விரத நாட்களே. சதுர்த்தி விரதம் எனப்படும் இந்த நாட்களிலும் விரதமிருப்பது மிக விசேஷமானதாகும். அவ்வாறு அனுஷ்டிக்க முடியாதவர்கள் விநாயக சதுர்த்தி எனப்படும் ஆவணிச் சதுர்த்தி நாளில் விரதமிருக்கலாம்.

மாதந்தோறும் விரதமிருக்க விரும்புவோர் ஆவணிச் சதுர்த்தியிலே பூஜை வழிபாடுகளுடன் சங்கல்பபூர்வமாக ஆரம்பித்து (இந்தக் காரணத்துக்காக இந்த விரதத்தை நான் இத்தனை வருடம் கைக்கொள்வேன் என்று சங்கல்பம் பூண்டு) முறைப்படி தவறாமல் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டும். இருபத்தொரு வருடம் விரதமிருப்பது நன்று. இயலாதெனின் ஏழு வருடங்கள் அனுஷ்டிக்கலாம். அல்லது இருபத்தொன்றுக்குக் குறையாமல் மாத சதுர்த்தி விரதமிருந்து அதையடுத்துவரும் ஆவணிச் சதுர்த்தியில் நிறைவு செய்யலாம்.

விரத உத்தியாபனம்

குறிப்பிட்ட கால எல்லை முடிந்ததும் அதாவது தாம் கைக்கொள்வதாகக் கருதிய வருடம் நிறைவு பெற்றதும் முறைப்படி விரதத்தை முடித்து விரதபலனைத் தருமாறு வேண்டுதல் செய்தலே விரதோத்யாபனமாகும்.

முன்பு கூறப்பட்ட விதமாக வீட்டிலே பூஜை வழிபாடுகள் செய்யும்போது தங்கம், வெள்ளி, செம்பு இவற்றில் ஏதாவதொரு உலோகத்தில் விநாயகர் திருவுருவத்தைச் செய்து வைத்து ஆவாகனம் செய்து பூஜை நடத்த வேண்டும். அன்று உபவாசமிருந்து மறுநாட்காலை புனர்பூஜையின் பின் (மீண்டும் பூஜை செய்தல்) உத்வாசனம் செய்து அர்ச்சகருக்குரிய தட்சணை தாம்பூலங்களுடன் உலோகப் பிரதிமையையும், கும்பப் பொருட்களையும், வேட்டி சால்வை முதலிய தானங்களையும் வழங்கி இதன்பின் மஹேஸ்வர பூஜை செய்து (சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தல்) தாமும் காலை எட்டரை மணிக்கு முன்னதாகப் பாரணை செய்து விரத பூர்த்தி செய்யலாம்.

விரத உத்யாபன சமயத்தில் பூஜையை ஆரம்பிக்கும் போது விரதோத்யாபன காலே யதோக்தபல சித்யர்த்தம் விசேஷ பூஜாம் ஆசார்ய முகேன ஆஹம் அத்ய கரிஷ்யே' (விரத பூர்த்தி காலத் தில் சாஸ்திரத்தில் கூறியபடி விரதத்துக்குரிய பலன்கள் எனக்குச் சித்திக்க வேண்டுமெனக் கருதி இந்தப் பூஜையைச் செய்கிறேன்) என்று சங்கல்பத்துடன் ஆரம்பித்து ஷிறிவில் அர்ச்சகருக்குரிய தானம் வழங்கும் போது ப்ரதிமாம் வஸ்த்ர சம்யுக் தாம் கும் போகரணைர்ய தாம். துப்யம் தாஸ்யாமி விப்ரேந்த்ர யதோக்தபல தோ பவ - (பிரதிமை; வஸ் திரங்கள், கும்பப் பொருட்கள் முதலியன தானங்களை மகிழ்ச்சியுடன் பிராமணோத்தமருக்கு வழங்குகிறேன். இவ்விரதத்திற்குச் சொல்லப்பட்ட பலன்கள் எனக்கு உண்டாகட்டும்) என்று பிரார்த்திக்க வேண்டும்.

பூஜை முடிவில் கும்பத்தால் விநாயகருக்கு அபிஷேகம் செய்வித்தலும் சொல்லப் பட்டிருக்கிறது. உலோகப் பிரதிமை செய்வதற்கு வசதியில்லாதவர்கள் பிள்ளையாரை களிமண்ணால் செய்து வழிபட்டபின் அதனை நீர்நிலையில் விட்டு விடலாம்.

விரதோத்யாபன காலத்தில் இவ்வாறு வீட்டில் பூஜைகள் செய்ய வசதியில்லாதவர்கள் ஆலயத்துக்குச் சென்று அபிஷேகம்,பூஜை, அர்ச்சனை, உற்சவம் முதலியன செய்வித்தபின் அல்லது குறைந்த பட்சம் விரதோத்யாபனத்துக்குரிய சங்கல்பத்துடன் சஹஸ்ர நாமார்ச்சனையாவது செய்து அர்ச்சகருக்குரிய தாம்பூல தட்சணைகள் தானங்கள் வழங்கி முன் கூறியவாறு விரதபலனைத் தருமாறு பிரார்த்தித்து விரதத்தை பூர்த்தி செய்யலாம்.

# இராசி பலன்

25.08.2017
(ஆவணி 09, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 10.47 மணிவரை
அத்தம் பிற்பகல் 5.29 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
விநாயகர் சதுர்த்தி விரதம்,
அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம், பூரட்டாதி<br>இரவு 4.25 மணிக்கு<br>துலா-சந் | | ராகு,சுக்.<br>செவ்,புத |
| கேது | | | சூரி |
| | சனி | | குரு<br>சந் |

**மேடம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**இடபம்:** பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** இனிமையான அனுபவங்கள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், சாமர்த்தியமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள்.

**சிம்மம்:** தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், திடீர் பணவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்:** சுபவிரயங்கள் ஏற்படும் நாள், பயணங்கள் கைகூடும், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்:** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், உறவினர் பகை அகலும், வருமானம் திருப்தி தரும்.

**தனுசு:** கௌரவமான நாள், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன நன்மையுண்டு.

**மகரம்:** எதிர்பார்ப்புகள் கைகூடும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** கணபதியை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மற்றவர்கள் மனங் கோணாது நடந்து கொள்வது நல்லது, உடல்நலனில் கவனம் தேவை.

**மீனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், தன வரவுகள் திருப்திகரமானதாக அமையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

99

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 17.05.2015 அன்று கைது செய்யப்பட்ட ஐந்து பேரும் குறிகாட்டுவான் கடல் வழியாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கைதானவர்கள் குறிகாட்டுவான் கடல் வழியாகக் கொண்டு செல்லப்பட்ட செய்தியை அங்கு கூடிநின்ற மக்கள் சில மணி நேரங்களின் பின்னரே அறிந்து கொண்டனர்.

இச்சம்பவங்கள் நடக்கும் போது இரவு 10 மணியை நெருங்கி விட்டது. புங்குடுதீவில் பதற்றம்; குறிகாட்டுவானில் மக்கள் ஆர்ப்பாட்டம் என்ற செய்தியை அறிந்த மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் உடனடியாக அங்கு விரைந்தார். குறிகாட்டுவானுக்குச் சென்ற பிரதி அமைச்சர் விஜயகலா அங்கு கூடி நின்ற மக்களுடன் உரையாடினார். குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளாமல் இருக்க, உடனுக்குடன் பொலிஸாருக்கு தகவல் கொடுத்து விரைந்து நடவடிக்கை எடுங்கள் என்று அறிவுரை கூறியிருந்தார்.

நிலைமை இவ்வாறிருக்க பொலிஸாரின் பஸ் வண்டி ஒன்று அந்நேரம் வெளிச்சம் இல்லாமல் புங்குடுதீவு மடத்துவெளி ஊடாக புங்குடுதீவு தாம் போதியைக் கடந்து வேலணைத் துறையை அடைகிறது.

பொலிஸாரின் பஸ் வண்டிக்கு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வெளிச்சம் கொடுத்து வந்தன.

பஸ்ஸை அடுத்து ஆட்டோ ஒன்றும் வந்து கொண்டிருந்தது. ஆட்டோவில் சாரதியை விட இரண்டு பேர் இருந்தனர் வேலணைத் துறையில் ஏகப்பட்ட சனங்கள் கூடியிருந்தனர். கைது செய்யப்பட்ட ஐந்து பேரும் குறிகாட்டுவானில் இருந்து இப்பாதையூடாகக் கொண்டு வரப்படுவர் என்ற எதிர்பார்ப்பில் வேலணைத் துறையில் மக்கள் கூடியிருந்தன ராயினும் எதிர்பார்ப்பு நடக்காத போதிலும் மற்றொரு பெரிய சம்பவம் எதிர்பாராமல் நடந்தது.

ஆம். வந்த ஆட்டோவில் இருந்தவர்களில் ஒருவர்தான் சுவிஸ்குமார்.






அங்குகூடியிருந்த மக்கள் சுவிஸ் குமாரை முன்கூட்டியே அறிந்திருக்கவில்லையாயினும் இரவு 10 மணியளவில் புங்குடுதீவில் இருந்து எதற்காக இவர் வெளியேறவேண்டும் என்ற கேள்வி கூடி நின்றவர்களிடம் ஏற்பட, சுவிஸ்குமார் மீது விசாரணை தொடுக்கப்பட்டது.

இவை நடக்கும்போது ஆட்டோ சாரதியும் மற்றைய நபரும் தப்பியோடியிருந்தனர். மக்களின் விசாரணையின்போது சுவிஸ்குமாரின் வாக்கு மூலம் முன்னுக்குப்பின் முரண்பாட்டைக் கொண்டிருக்க, அங்கு நின்ற இளைஞன் ஒருவன் சாத்தடா அவனுக்கு என்று சொல்ல, நின்றவர் போனவர் அனைவரும் தர்ம அடி கொடுத்தனர்.

இவையெல்லாம் நடக்கும்போது இரவு 11.30 மணியாகியிருந்தது. இதனிடையே வேலணைத்துறையில் வைத்து சுவிஸ்குமார் தாக்கப்படுகின்றார் என்ற செய்தி புங்குடுதீவு ஆலடியில் வசிக்கும் அவரின் மனைவி, பிள்ளைகளுக்குக் கிடைக்க சுவிஸ்குமாரின் மனைவியும் இரண்டு சிறு பிள்ளைகளும் ஆட்டோ ஒன்றில் ஏறி வேலணைத் துறைக்கு வந்து, அங்கு நின்றவர்களிடம் அழுது மன்றாடி சுவிஸ்குமார் தாக்கப்படுவதில் இருந்து காப்பாற்றிக்கொண்டனர்.

இவையெல்லாம் நடந்து கொண்டிருக்கும் போது திருத்த வேலைக்காக யாழ்ப்பாணத்திற்குச் சென்ற தனியார் பஸ் ஒன்று புங்குடுதீவை நோக்கி வந்து கொண்டிருந்தது.

சுவிஸ்குமாரின் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் பஸ்ஸை வழிமறிக்க சம்பவம் எதனையும் அறியாத பஸ்சாரதி பஸ்ஸை நிறுத்த சுவிஸ் குமார், அவரது மனைவி, இரண்டு பிள்ளைகள் என நால்வரும் பஸ்ஸில் ஏறி ஆலடிச் சந்தியில் இறங்கிக் கொண்டனர்.

வித்தியா கொலைச் சம்பவத்துடன் தொடர்பு பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தனது சகாக்கள் ஐவர் கைது செய்யப்பட்டி ருந்ததை சுவிஸ்குமார் அறிந்ததன் காரணமாகவே அவர் புங்குடுதீவை விட்டு வெளியேற முயன்றார் என்பது உறுதியாகியது.

எதுவாயினும் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஐவருடன் சுவிஸ்குமாரும் சேர்ந்து வித்தியாவின் மரணச் சடங்கில் கலந்து கொண்டதுடன் வித்தியாவின் உடலைத் தாங்கிய பேழையைத் தூக்குவதற்கும் உதவி புரிந்தனர்.

தங்கள்மீது எவரும் சந்தேகம் கொள்ளாமல் நடந்தனர் என்பதும் இங்கு நோக்கு தற்குரியது.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்டுள்ள மக்கள் நலன் சார்ந்து அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பேன்

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன் உறுதிமொழி

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் நலன் சார்ந்து விவசாய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வேன் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தெரிவித்துள் ளார்.

அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் வவுனியா மாவட்ட மக்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கு மாகாண விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை, மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராக புளொட் அமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் கந்தையா சிவநேசன் நேற்று முன்தினம் சத்தியப் பிரமாணம் செய்து கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதன் பிரகாரம் புதிய அமைச்சருக்கு நேற்று முன்தினம் இரவு வவுனியாவில் அமோக வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா - கோவில்குளத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவர் உமா மகேஸவரனின் நினைவிடத்திற்கு விஜயம் செய்த கந்தையா சிவநேசனுக்கு இளைஞர்கள் பட்டாசு வெடிக்க வைத்து வரவேற்பு வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவர் உமா மகேஸ்வரனின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்திய கந்தையா சிவநேசனுக்கு, கழகத்தின் ஆதரவாளர்கள் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு வழங்கினர்.

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மாகாண விவசாய அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என்பது முதலமைச்சரின் விருப்பம் என்று குறிப்பிட்ட அவர்,

அதனடிப்படையில் அமைச்சுப் பொறுப்பை ஏற்றிருப்பதாகவும் குறுகிய காலத்திற்கு கிடைத்திருக்கும் அமைச்சுப் பதவியை மக்கள் நலத்திட்டங்களுக்கு பயன்படுத்துவேன் என்றும் உறுதியளித்துள்ளார். (2-250-281)








வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் நேற்று முன்தினம் வவுனியா கோவிற் குளத்தில் உள்ள அமரர் உமா மகேஸ்வரனின் நினைவில்லத்தில் வைத்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் . இளைஞர்கள் அணியினர் ஆகியோரால் மாலை அணிவித்து வரவேற்பு அளிக்கப்பட்டார்.

இதன்போது வடக்கு மாகாண விவசாய அமைச்சர் முதல் கடமையாக தலைவர் க. உமாமகேஸ் வரன் பெரிய ஐயா சமாதியின் முன்னிலையில் அஞ்சலி செலுத்தி விளக்கேற்றினார். இந் நிகழ்வு நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் நடைபெற்றது. (படங்கள்: ஓமந்தை செய்தியாளர்)

## தண்ணீர் பவுசர்கள் கையளிப்பு




கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகத்தினால் கரைச்சி மற்றும்பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர்களிடம் தண்ணீர் பவுசர்கள் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

நாட்டில் தற்போது நிலவிவரும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு தண்ணீர் வழங்கும் முகமாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் உழவு இயந்திரங்களுடனான தண்ணீர் பவுசர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட பவுசர்கள் கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி ஆகியோரிடமும் தலா ஒவ்வொரு தண்ணீர் பவுசர்கள் நேற்று பிரதேச மக்களின் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டன.

ஏற்கனவே அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்கு 4 தண்ணீர் பவுசர்களும் கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேசங்களுக்கு தலா 3 தண்ணீர்பவுசர்களும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-312)

## படையினரின் பயன்பாட்டிலிருந்த வை.எம்.சி.ஏ.காணி விடுவிப்பு




கிளிநொச்சி - முரசுமோட்டைப் பகுதியில் கடந்த எட்டு வருடங்களிற்கு மேலாக இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்த வை. எம்.சி.ஏ காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வை.எம்.சி.ஏ. காணியில் இருந்து படையினர் முழுமையாக நேற்றையதினம் வெளியேறி காணியை உரிய நிர்வாகத்திடம் கையளித்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஏ-35 வீதியின் முரசுமோட்டை கோரக்கன்கட்டுப் பகுதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்த காலப் பகுதியிலிருந்து கடந்த எட்டு வருடங்களாக படையினரின் பயன்பாட்டில் இருந்து வந்த வை.எம்.சி.ஏ.காணியே விடுவிக்கப்பட்டுள்ளது. (2)

## மின்னிணைப்புக்காக காத்திருக்கும் மக்கள்

பூநகரி பகுதியில் தெளிகரை, செம்பன் குண்டு ஆகிய இடங்களில் இருந்து நாட்டில் நடைபெற்று முடிந்த யுத்த சூழலில் இடம் பெயர்ந்து 2010 ஆம் ஆண்டு மீளவும் குடியேறிய பல குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் கிடைக்கப் பெற்றும் மின் இணைப்பு செய்திருந்த நிலையில் தமக்கு சுமார் 7 வருட காலமாக மின்சாரம் வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். தாம் இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட மின்பொறியியலாளரை சந்தித்து தெரியப்படுத்திய வேளை கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் எமது பகு திக்கு நேரில் வருகை தந்து அவர் பார்வை யிட்டு சென்ற போதும் இது வரையும் எதுவித மான நடவடிக்கையும் நடைபெறவில்லை யென அம் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமது அயலில் உள்ள பாடசாலை மாணவர்கள் மின்னொளியில் நாளாந்தம் படிக்கின்ற போதும் எமது பிள்ளைகளின் மன நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பாக பல அரசியல் வாதிகளை சந்தித்திருந்த நிலையிலும் அவர்கள் உறுதிமொழி வழங்கியும் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாதமை தொடர்பில்மக்கள்தமதுஅதிருப்தியைதெரிவிக்கின்றனர்.

ஆதலால் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்து தமது பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளைப் போன்று மன உளைச்சலின்றி மின்னொளியில்கல்விகற்கஆவனசெய்யவேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-84)

## நிலமெஹெவர துணுக்காயில் நாளை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் அறிவுறுத்தலுக்கமைய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நில மெஹெவர நிகழ்ச்சித்திட்டம்-2017 துணுக்காய் பிரதேச செயலகத்தில் நாளை சனிக்கிழமை அன்று நடைபெறவுள்ளது. அன்றைய தினம் சேவைபெறுநர் அனைவரையும் கலந்து கொண்டு சேவைகளை பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35 மில்லியன் ரூபா செலவில் முல்லைத்தீவில் நெற்களஞ்சியம்

## அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான நெற்களஞ்சியம் அமைப்பதில் பெரும் இழுபறி நிலை வந்த நிலையில் நெற் களஞ்சிய விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நெற்களஞ்சியத்தை அமைக்கும் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாளை சனிக்கிழமை ஒட்டுசுட்டானில் கட்டுமானப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக 2015ஆம் ஆண்டில் முல்லைத்தீவில் நெற்களஞ்சியம் அமைப்பதற்காக சுமார் 35 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், அதிகாரிகள் களஞ்சியம் அமைப்பதற்கு உகந்த இடத்தைத் தெரிவு செய்வதில் காட்டிய அசமந்தம் காரணமாக அந்த நிதி மீண்டும் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது.

தமது நீண்டகால கோரிக்கை நிறைவேறும் எனத் எதிர்பார்த்திருந்த விவசாயிகள் பெரும் ஏமாற்றமடைந்தனர்.

இவ்வாறான நிலையில் நாளை சனிக்கிழமை நெற்களஞ்சியத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு ஒட்டுசுட்டானில் இடம்பெறும் என மாவட்டச் செயலர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த நெற்களஞ்சியத்தை மிகப்பெரியளவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கான நிலமும் தெரிவு செய்யப்பட்டு, நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபையின் ஊடாக கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஒட்டுசுட்டான் வித்தியாபுரம் பகுதியில் களஞ்சியம் 35 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும். இந்தக் களஞ்சியத்தின் கட்டுமானப் பணிகள் அடுத்த ஆண்டில் நடுப்பகுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

அடிக்கல் நாட்டும் நிகழ்வுக்கு அமைச்சர்களான அமீர் அலி, றிசாத் பதியுதீன் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி முரசுமோட்டைப்பகுதியில் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய சந் தேக நபர்கள் இரண்டு பேரையும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி முரசுமோட்டைப்பகுதியில் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட இரண்டு சந்தேக நபர்களையும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதிவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த இருவரையும் எதிர்வரும் செப்டெம்பர் 4 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

கிளிநொச்சிப் பளைப்பகுதியில் சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுடன் தொடர்புபட்டதாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி பல்ள முல்லையடிப்பகுதியில் சிறுவர் துஷ்பிரயோகத்துடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த சந்தேகநபரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

கிளிநொச்சி பகுதியில் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை வாகனத்தில் கொண்டுசென்ற குற்றவாளிக்கு எழுபத்தி ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பளைப்பகுதியில் கப் ரக வாகனத்தில் ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 562 ரூபா பெறுமதியான முதிரை மரத் தீராந்திகளை ஏற்றிச்சென்ற ஒருவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது, குறித்த நபர் சுற்றவாளியெனத்தெரிவித்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் விளக்கத்திற்கு தவணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட நபர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து எழுபத்தி ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

கிளிநொச்சி வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதியில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நான்கு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டக்கச்சிப்பகுதியில் ரோந்துக்கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது எட்டுப்பேர் கொண்ட குழு ஒன்று தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்து கடந்த நான்கு மாதங்களிற்கு முன்னர் எட்டுப்பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து தொடர்ந்து விளக்கமறியலில் இருந்த நான்கு சந்தேக நபர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதோடு, பிரதானமான ஏனைய நான்கு சந்தேகநபர்களையும் நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட நான்கு சந்தேக நபர்களையும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த நான்கு பேரையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளி மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

கிளிநொச்சி முக்கொம்பன் பகுதியில் தற்போது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை அதிகரித்துக் காணப்படுவதாக பல்வேறு தரப்புக்களும் குற்றம் சாட்டியுள்ளன.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முக்கொம்பன் பகுதியில் அண்மைய நாட்களாக கசிப்பு உற்பத்தி விற்பனைகள் அதிகரித்துள்ளதாக பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு கசிப்பு உற்பத்தி விற்பனைகளால் பல்வேறு தரப்பட்ட குற்றச்செயல்களும் அதிகரித்து வருவதாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் இந்தப்பகுதியில் பொலிஸாருக்கு வழங்கப்பட்டு பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது கசிப்பு உற்பத்திக்கு தயாராக இருந்த இரண்டு பரல் கோடா மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# பாராளுமன்ற உறுப்பினரின் தலையீட்டையடுத்து பூநகரியில் மணல் கொள்ளை தடுத்து நிறுத்தம்



பூநகரி கௌதாரிமுனை பகுதியில் கடந்த 22 ஆம் திகதி இடம்பெற இருந்த மாபெரும் மணல் கொள்ளை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் நேரடி தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இப் பகுதியில் தேவாலயத்திற்கும், அரசாங்கத்திற்கும் சொந்தமான பெருமளவான மணல் காணப்படுகிறது. இந்தக்கிராமத்தின் முக்கிய வளமாக அந்த மணல் வளம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த பகுதியை அபிவிருத்தி திட்டத்திற்கு வழங்காது மன்னார் பகுதியைச் சேர்ந்த தனிநபர் ஒருவருக்கு மணலை அகழ்வதற்கான அனுமதி முறையற்ற ரீதியில் அரச அதிகாரிகளால் வழங்கப்பட்டு கடந்த 22 ஆம் திகதி இரவு நேரத்தில் மணல் அகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

இச் செயற்பாடு தொடர்பாக கிராம மக்களால் பொருத்தமான அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரியிடம் தெரியப்படுத்திய போதும் தடுத்து நிறுத்துவதற்காக எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அம்மக்களால் குறித்த விடயம் தொடர்பாக கடந்த 22 ஆம் திகதி நள்ளிரவு 11 மணியளவில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர் அவ்விடத்திற்கு உடனே சென்று மணல் அகழ்வை தடுத்து நிறுத்தியதோடு பொலிஸாருடனும் தேவாலயத்திற்கு பொறுப்பான போதகருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (2-312-281)




# வீதிகளில் பெண்களின் நகைகளை அறுத்த நபர் பொலிஸாரிடம் வசமாக மாட்டினார்

வவுனியாவில் பல பிரதேசங்களில் வீதியில் செல்லும் பெண்களின் நகைகளை அறுத்துத் தப்பியோடிய நபரை நேற்று முன்தினம் வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

வவுனியாவில் ஆசிகுளம், கோவில்குளம், பட்டைகாடு போன்ற பல்வேறு பகுதிகளில் பகல் நேரத்தில் வீதியில் செல்லும் பெண்களின் தங்கச்சங்கிலி, தாலிக்கொடி போன்ற தங்க நகைகளை குறிவைத்து அறுத்து தப்பியோடிய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மகாறம்பைக்குளம் பகுதியை சேர்ந்த யோகலிங்கம் தர்சன் (வயது-26) என்ற நபரே கைது செய்யப்பட்டவராவார். குறித்த நபர் அண்மையில் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இச் சம்பவத்துடன் தொடர்புபட்ட மற்றுமொரு நபரை தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் சூட்சுமமான முறையால் குறித்த நகைகளை விற்பனை செய்த இடத்திலும், அடகுவைத்த இடத்திலும் இருந்து நான்கு இலட்சம் பெறுமதியான நகைகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமாரவின் வழிகாட்டலின் கீழ் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிய ஸ்ரீ பெர்னாண்டோ, மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் பூரளகெதர, பொலிஸ் சார்ஜன் ஜேசுதாசன் தலைமையிலான குழுவினர் இந் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கையை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (2-250)

# அம்பாறை மாவட்ட உறவுகள் ஆதரவு



முல்லைத்தீவு மாட்டத்தின் கேப்பாபிலவு பூர்வீகக் கிராமத்திலுள்ள பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளை விடுவிப்பதற்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யாகிப் போன நிலையில் நேற்றுடன் 177 ஆவது நாளாகவும் மக்கள் தொடர் போராட்டத்தில் [illegible]

இராணுவத்தின் வசமுள்ள தமது பூர்வீக காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் முன்னெடுக்கும் மக்கள் போராட்டம் நேற்று 177 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட மக்கள் வருகைதந்து இவர்களின் போராட்டத்துக்கு தமது ஆதரவை வழங்கியதோடு நல்லாட்சி அரசு இவர்களுக்கு உடனடியாக தீர்வை வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 22 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவை சந்தித்து கேப்பாபிலவு மக்கள் சிலர் கலந்துரையாடியதோடு நேற்று முன்தினம் இராணுவத்தளபதி உள்ளிட்டவர்களை சந்தித்தும் தாம் எதிர்பார்த்த முடிவுகள் எவையும் எட்டப்படாது வழமை போன்று காலக்கெடுகளே வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தநாரீ அரசு




கம்பவாரிதி இ.ஜெயராஜ்

உருப்படுமா? உடையுமா? எனும் கேள்வியை எழுப்பி, தள்ளாடி நிற்கிறது நல்லாட்சி அரசு.

சைவசமயத்தில் சிவனும் உமையும் பாதி பாதி கலந்ததான ஓர் வடிவம் உண்டு.

ஆணும் இல்லாமல் பெண்ணும் இல்லாமல் இருக்கும் அவ்வடிவிற்கு அர்த்தநாரீ என்று பெயர்.



இரண்டுங் கெட்டதாய் இருக்கும் அவ் 'அர்த்தநாரீ' வடிவை ஒத்ததாகவே இருக்கிறது இன்றைய நல்லாட்சி அரசு.

கிட்டத்தட்ட நம் வட மாகாண சபையின் நிலையைப் போலத்தான் நல்லாட்சி அரசின் நிலையும்.

ஒரே ஒரு வித்தியாசம். நல்லாட்சி அரசின் தலைவர்கள் சற்று நிதானமாய்ச் செயற்படுகிறார்கள்.

எங்கள் தலைவர்களிடம் அதுவும் இல்லை!

சோதிடத்தை நம்பி அவசர அவசரமாய்த் தேர்தலில் குதித்த 'மகிந்தவுக்கு' எதிராக, அதுவரை பகைமுகம் காட்டி நின்ற பேரினத்தின் இருபெருங் கட்சிகளும் கைகோர்த்தன.



மகிந்தவின் சர்வாதிகாரத்தை வீழ்த்தவென தேர்தல் களத்தில் குதித்து வெற்றியும் ஈட்டின.

அப்புரட்சியில் மற்றவர்களால் முன் தள்ளப்பட்டு அதுவரை முகம் தெரியாதிருந்த மைத்திரி அவர்கள்,

வடக்கு முதலமைச்சரைப் போலவே திடீரென யாரும் எதிர்பாராத வண்ணம் ஜனாதிபதியானார்.

மகிந்த குடும்பத்தினரிடமிருந்து கட்சியையும் தேசத்தையும் மீட்கவேண்டிய அவசியம் ஒருபுறம்.

இறுதிப் போரில் நிகழ்ந்த மனித உரிமை மீறலுக்கு எதிராக உலகு தந்த நெருக்கடி மறுபுறம்.

இவ்விரண்டு நெருக்கடிகளிலிருந்தும் மீண்டுவர, நல்லாட்சி அரசு பெரும்முயற்சி செய்ய வேண்டியிருந்தது.

அதனால், தமிழர்களுக்கான உரிமைப் பிரச்சினையை அங்கீகரித்து நல்லாட்சித் தலைவர்கள் பேசிய போதும், எளிமையும் இனிமையும் பட ஜனநாயகப் பண்புகளைக் காட்டி மைத்திரி நடந்து கொண்ட போதும், தமிழ்த் தலைவர்களை மதித்ததன் மூலம் தமிழர்களை அங்கீகரிப்பதாய் அவ் அரசு காட்டிக் கொண்டபோதும்,

இலங்கையில் புதிய சமாதான யுகம் ஒன்று பிறக்கப் போகிறது எனும் நம்பிக்கை பலரது மனங்களிலும் ஆழப் பதிந்தது.

எல்லாம் சில நாட்களுக்குத் தான்!

மைத்திரியின் தலைமையிலான சுதந்திரக்கட்சியும், ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும்,

ஆரம்பத்தில் ஒன்றுபட்டு நற்சகுனம் காட்டி நகர்ந்த போதும், அச்சகுனம் அதிக நாள் நீடிக்கவில்லை.

அதற்குப் பல காரணங்கள்.

இன ஒற்றுமை விடயத்தில் தமிழர்கள் சார்பாக அவர்கள் எடுத்த சில முயற்சிகள்,

சிங்கள இனத்தைக் காட்டிக் கொடுக்கும் முயற்சிகளாய், மகிந்த அணியினராலும் வேறு சில தீவிரவாத பேரின அமைப்புக்களாலும், பேரினத்தார் மத்தியில் வியாக்கியானம் செய்யப்பட்டன.

அபூர்வமாய் நிகழ்ந்த, ஆட்சி அமைக்கும் ஆற்றல் கொண்ட இருபேரினவாதக் கட்சிகளின் இணைப்பை, புத்திசாலித்தனமாய்ப் பயன்படுத்தி தமிழினத்திற்கு நன்மை தேடத் தெரியாத தமிழ்த் தலைவர்கள் சிலர், உலக நிர்ப்பந்தத்தால் நிகழ்ந்த, நல்லாட்சித் தலைவர்களின் பணிவை நிஜப்பணிவென நினைந்து, 'மிகைப்பட்டு செம்மாந்து' அறிக்கைகள் மூலம் அறைகூவல்களை அள்ளிவிட,

பேரினவாதிகளிடம் நீறு பூத்துக் கிடந்த இனப்பகை மீண்டும் மெல்லக் கிளர்ந்தெழத் தொடங்கியது.

அங்ஙனம் கிளர்ந்த பகைச் சூட்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த குழுவினர் குளிர்காய ஆரம்பித்தார்கள்.

அதன் விளைவாய் சுதந்திரக் கட்சியில் பிளவு உருவாகத் தொடங்கியது.

ஐக்கிய தேசியக் கட்சியிடம் சுதந்திரக்கட்சியை மைத்திரி அடகுவைப்பதாய் எதிரணியினர் பிரசாரம் தொடங்க,அவர்களின் பின் சுதந்திரக் கட்சியினர் சிலரும் அணிசேர ஆரம்பித்தார்கள்.

அதனால் ஐக்கிய தேசியக் கட்சியினரும் அவர்களுக்கு எதிராய் 'கைமுறுக்கத்' தொடங்கினார்கள்.

இச்சம்பவங்களால் நல்லாட்சி அரசின் பெயரால் ஒற்றுமைப்பட்ட இருபேரினவாதக் கட்சிகளும், மீண்டும் 'கயிறிழுப்பை' ஆரம்பித்திருக்கின்றன.

தனது நம்பிக்கைக்குரியவரான முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவை பதவியிறக்க,

சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் காட்டிய வலிமையான எதிர்ப்புக்கு ரணில் பணியவேண்டி வந்தது.

அதனால் கொதிப்படைந்த ஐக்கிய தேசியக்கட்சியினர் பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் விதுரனைப் பார்த்து துரியோதனன்,

நன்றி கெட்ட விதுரா
சிறிதும் நாணமற்ற விதுரா!
தின்ற உப்பினுக்கே நாசம்
தேடுகின்ற விதுரா!
அன்று தொட்டு நீயும்
எங்கள் அழிவு நாடுகின்றாய்
மன்றிலுன்னை
வைத்தான் எந்தை மதியை
என்னுரைப்பேன்,

என்று சொன்னாற் போல,

இனங்களுக்கிடையிலான பகையுணர்வோடு, நடுநிலை தவறி, மகிந்த சார்பாக இயங்கி நின்ற, நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக இன்று போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள்.

சிறிதாய்த் தொடங்கிய பகை மெல்ல மெல்ல முற்றியதால்,இன்று, ஒன்றை ஒன்று விழுங்கும் ஆவேசத்துடன் இரு கட்சிகளும்...

அவர்தம் பிளவு மகிந்த தலைமையினரான மாற்றணியினர்க்கு வலியவரும் வரப்பிரசாதமாய்த் தோன்ற, அடங்கிக் கிடந்த அவர்கள் ஆர்ப்பரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

பிளவு நிச்சயமெனத் தோன்றுகிறது.

இவர்தம் பிளவுக்குப் பலியாகப் போவது தமிழர்தம் உரிமைப் முயற்சியேயாம்.

ரணிலின் வருகையோடு அமெரிக்க அரசு,இலங்கை மீதான பகையை மெல்ல மெல்லக் கைவிடத் தொடங்கியிருக்கிறது.

இலங்கையின் வளங்களைக் கூறுபோட்டுக் கொடுத்து, சீனாவையும் இந்தியாவையும் கூட, தன் இராஜதந்திரத்தால் ரணில் ஓரளவு வயப்படுத்தி நிற்கிறார்.

இங்ஙனமாய் உலக, பிராந்திய வல்லரசுகளின் அனுசரணை பெற்ற காரணத்தால்,இனி, தமிழர்தம் பிரச்சினையை அந்நாடுகள் உலக அளவில் விரித்து, இலங்கைக்கு நெருக்கடியைக் கொடுக்கப்போவதில்லை என்பது நிச்சயம்.

எனவே நல்லாட்சி அரசு உடையவும் பட்சத்திலும் நஷ்டப்படப்போவது நாம்தான்.

வாராது வந்த மாமணியாக அமைந்த அரிய சூழலைப் பயன்படுத்தத் தவறிய நம் தலைவர்கள், அதுபற்றிய எந்தக் கவலையும் இல்லாமல் தமக்குள்ளே மோதிப் பொழுதுபோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பொருந்தாத இரண்டு பொருந்திய போதே இச்சூழல் சில நாட்களுக்குத்தான் என, நம் தலைவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

அவர்கள் பிரியும் முன் அவ் அபூர்வ சேர்க்கையைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

அந்த அளவு தீர்க்க தரிசனம் இருந்திருந்தால் என்றோ நாம் உயர்ந்திருப்போமே.

ஏன்தான் நம் இனத்திற்கு இந்த இழிவோ?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



எழுவைதீவு, முத்தன்காடு முருகமூர்த்தி ஆலயத்தின் வரலாற்றில் முதன்முறையாக புதிதாக உருவாக்கப்பட்ட புதிய சித்திரத்தேரின் தேர்த்திருவிழா கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது. வெகுவிமர்சையாக இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடமாகாண சபை உறுப்பினர்களான க.சிவநேசன் (விவசாய அமைச்சர் ). பா.கஜதீபன் ஆகியோரும் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். இந்நிகழ்வில் நாடாளுமன்ற , மாகாணசபை உறுப்பினர்கள் ஆலய நிர்வாகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

# இந்து ஆன்மீகப் பிரசாரகர் சான்றிதழ்கள் வழங்கல்



இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்ட ஆன்மீகப் பிரசாரகர் பயிற்சி நெறியின் முதலாம் அணியினருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நல்லூர் ஆதீன மண்டபத்தில் கந்த புராண எழுச்சி விழாவின் ஓரங்கமாக நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கலந்து கொண்டார் .

இந்நிகழ்வில் வரவேற்புரையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜினும் தொகுப்புரையை அபிவிருத்தி உத்தியோகத்தர் சுதாகரனும் ஆசியுரைகளை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் ஆகியோரும் ஆற்றினர்.

பயிற்சி நெறி தொடர்பான விளக்கவுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் ஆற்றினார்.

ஆன்மீகப் பிரசாரகர்களுக்கான சான்றிதழ்களை அமைச்சர் டி.எம். சுவாமிநாதனும் புத்தகத் தொகுதிப் பரிசில்களை நிகழ்வில் கலந்து கொண்ட பெரியோர்களும் வழங்கி மதிப்பளித்தனர். (இ-3)



யாழ். கட்டுவன் மேற்கு (ஜே/239) கிராமசேவையாளர் பிரிவில் 15 இலட்சம் ரூபா அரச பங்களிப்புடன் புதிதாக அமைக்கப்படவுள்ள நிரந்தர கிராம சேவையாளர் அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கும் நிகழ்வு அண்மையில் நடந்தது. கிராம சேவையாளர் கி.புருஷோத்தமன் அடிக்கல் நாட்டிவைப்பதையும் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

# 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி.

## நிஷாலினி நாகேந்திரம் (சுகி)



மலர்வு 1981-05-21

உதிர்வு 1998-08-25

திதி: ஆவணிச் சதுர்த்தி 2017.08.25

நெஞ்சினிலே நீ சுமந்தாய் கனவுகள்-கோடி
வஞ்சகரை உறவென நினைத்தாய்- நாடி
பிஞ்சு உனக்கு நஞ்சக வலைவிரித்தனர்-தேடி
தஞ்சமென நினைத்த மாலிசந்தியானும்-கூடி
ஆண்டாண்டு சென்றாலும் ஆறாது-இக்கொடுமை

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுகிஸ்தான், அல்வாய் (211)

உன் பிரிவால் ...

# மஹா கும்பாபிஷேகம்

புளியங்கூடல் சரவணை 2 ஆம் வட்டாரம் திருவரங்கபுரம் ரங்கநாயகி அம்பாள் சமேத அரங்கநாதப் பெருமாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.41 மணிமுதல் இடம்பெறும். (இ-3)

# இலங்கை வங்கி

## விலை மனுக்கோரல்

இலங்கை வங்கியின் தெரிவு செய்யப்பட்ட தங்க நகைப் பொதிகளின் விற்பனை

கேள்வி இல.2017/NP/09

இலங்கை வங்கியின் தெரிவு செய்யப்பட்ட தங்க நகைப் பொதிகளை விற்பதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விக்கான விண்ணப்பங்களை செயற்பாட்டு முகாமையாளர் (வடமாகாணம்),இலங்கை வங்கி, வட மாகாண அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் இடமிருந்து மீளளிக்கப்படாத தொகையாக கிளை ஒன்றிற்கு ரூபா 10,000/- + வரிகள் (VAT + NBT) இனையும், மீளளிக்கப்படும் தொகையாக கிளை ஒன்றிற்கு ரூபா 250, 000/- இனையும் வைப்புச் செய்ததன் பின்னர் பெற்றுக் கொள்ள முடியும். (காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

விலை கோருபவர்கள் மீளளிக்கப்படும் மற்றும் மீளளிக்கப்படாத தொகைகளை வைப்பிலிடும் போது பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

வியாபார நிறுவனமெனின் - வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி/கூட்டிணைவுச் சான்றிதழ் பிரதி

தனிப்பட்ட நபரெனின் - தேசிய அடையாள அட்டையின் பிரதி/சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி

விண்ணப்பதாரர்கள் பின்வரும் கிளைகளில் தங்க நகைப் பொதிகளை பரிசீலிக்க முடியும்.

| இடம் மற்றும் முகவரி | பரிசீலனைத் திகதி மற்றும் நேரம் |
|---|---|
| இலங்கை வங்கி | திகதி: 03.09.2017 |
| 1. பருத்தித்துறை கிளை | நேரம்: மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப 4.00 மணிவரை |
| 2. கைதடி கிளை | பரிசீலனை நேரத்தினை, விண்ணப்பதாரர்கள் வட |
| 3. மானிப்பாய் கிளை | மாகாண செயற்பாட்டு முகாமையாளர் ஊடாக முற்பதிவு |
| 4. உரும்பிராய் கிளை | செய்து கொள்ள வேண்டும். |
| 5. வவுனியா உயர்தர கிளை | |
| 6. முழங்காவில் கிளை | பெயர்: திரு.க. சகாதேவன் |
| 7. கிளிநொச்சி கிளை | தொலைபேசி இல: 021 222 4683, 077 512 1983 |

கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித்திகதி மற்றும் நேரம்: 06.09.2017 பி.ப.3.00 வரை

கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம்: 07.09.2017 மு.ப.10.00 வரை

விண்ணப்பதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட தங்க நகை பொதிகளுக்கு விலை கோர முடியும். அதே சமயம் அவ்விலை கோரல்கள் யாவும் ஒரே விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டு ஒரே கடித உறையினுள் இடப்படலாம்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம், விபரம் மற்றும் திறக்கப்படும் திகதி ஆகியன குறிப்பிடப்பட வேண்டும்.

முத்திரையிடப்பட்ட விலை கூறல்களை 07.09.2017 (கேள்வி முடிவுத் திகதி மு.ப 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு உதவிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்), இலங்கை வங்கி, வடமாகாண அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும் அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இட வேண்டும். காலதாமதமாகிய விலை கூறல்கள் யாவும் நிராகரிக்கப்படுவதோடு, திறக்கப்படாது விலை கோரியோரிற்கு மீள அனுப்பப்படும். காலதாமதமான விலை கூறல்கள் தொடர்பாக தபாலில் இட்டமைக்கான சான்றுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விலை கூறல்கள் ஏற்கப்படும் முடிவு நேரத்தின் பின்னர் உடனடியாக கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் விலை கோரியவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி (விலை கூறிய ஒருவருக்கு ஒரு பிரதிநிதி கேள்விகள் திறப்பின்போது சமுகமளிக்கலாம்.

தெரிவு சம்பந்தமாக தெரிவு செய்யப்பட்ட விலை கூறியோர்/களுக்கு மாகாண உதவிப் பொதுமுகாமையாளரினால் அறியத்தரப்படும்.

தெரிவு செய்யப்பட்ட விலை கூறியோர், தெரிவு செய்யப்பட்டமை அறியத்தரப்பட்ட நாளிலிருந்து 3 வேலை நாட்களினுள் முழுத் தொகையையும் செலுத்த வேண்டும். முழுத் தொகையை செலுத்திய நாளிலிருந்து 7 நாட்களினுள் சம்பந்தப்பட்ட கிளையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட விலை கூறியவரிற்கு தங்கநகைப் பொதி கையளிக்கப்படும்.

எக் காரணமும் குறிப்பிடாது விலை கூறல் எல்லாவற்றையும் அல்லது எவற்றையேனும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

உதவிப் பொது முகாமையாளர்,
(வடமாகாணம்),
இலங்கை வங்கி,
வடமாகாண அலுவலகம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி-9417)

தொலைபேசி இல: 021 222 3985
திகதி: 25.08.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுராதபுரம், கனத்தாவ, ஈரற்பெரியகுளம், நேரிய குளம், தருமபுரம், வவுனிக்குளம், காரைநகர் முதலிய இடங்களில் முன்னர் இயங்கி வந்ததும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட எமது 23 வைத்திய தலைமுறைகளுக்குரிய பரம்பரை ஓலைச் சுவடிகளிலுள்ள வைத்திய நுணுக்கங்கள் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் ஆண்டாண்டு காலமாக கற்பித்தவைகளில் சிறந்தனவும் எமக்கு கிடைத்த பல வைத்திய மேதைகளின் (இராவணன், நல்லூர் அரசர்கள் செகராஜசேகரன், பரராஜசேகரன் உட்பட இலங்கைக்கேயுரிய உள்நாட்டு வைத்திய முறைகள் அதிசிறந்த தென்னிந்திய பதினெண் சித்தர் களதும் வட இந்திய ஆயுள்வேத மருத்துவ நூல்கள் மூலமாகவும் நவீன முறைகள் மூலமாகவும் எம்மால் தயாரிக்கப்படுகின்ற எமது பரம்பரைக் கேயுரிய சுதேச மருந்துகள் மற்றும் இந்திய இலங்கை சித்த ஆயுள்வேத மருந்துகள் (நன்கு செயற்படக் கூடியதென பெயர் பெற்ற தெரிந் தெடுக்கப்பட்டவை) மூலமாக மாற்றமுடியாதென கருதி கை விடப்பட்ட வியாதிகளை நீக்குவதில் (வாதம் / சளி / மூலம் / வயிற்றுப்புண் / சரும நோய் / உடற்பருமன் / சீறுநீரகம் / தலைமுடி உதிர்தல் / நரம்பு வியாதிகள் உட்பட பல) பெயர் பெற்றதுடன் தற்போது விசேடமாக குழந்தையின் மைக்குரிய சிகிச்சையில் நூற்றுக்கணக்கான குழந்தைகளை இலங்கையில் பல்வேறு மாவட் டங்களிலும் பல வெளிநாடுகளிலும் உருவாக்கி பிரபலமடைந்துள் ளது.

இங்கு சிகிச்சை பெற்றதன் பயனாக உருவாகிய குழந்தைகளில் தெரிவு செய்யப்பட்ட 10 குழந்தைகளுக்கு 2011ஆம் ஆண்டு ஆயுள்வேத அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சுதேச அமைச்சு அதிகாரிகள் மற்றும் பிரமுகர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டது தெரிந்ததே. அதன் பின் மீண்டும் நீண்ட கால இடைவெளியில் நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா நாளில் 20.08.2017 ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 3.00 மணிக்கு ஆண்டுவிழாவும் பரிசளிப்பும் நடத்தப்பட்டது.

2011ஆம் ஆண்டின் பின் ஒவ்வொருவருடமும் பிறந்த குழந்தைகளில் தெரிவு செய்யப்பட்ட 10 குழந்தைகள் வீதம் 50 குழந்தைகளுக்கும் வெளிநாடு சென்று சிகிச்சை பெற்றும் குழந்தை கிடைக்காது இங்கு சிகிச்சை பெற்றதனால் பிறந்த குழந்தைகளில் தலா ஒரு வருடத்திற்கு ஒரு குழந்தை வீதம் 5 குழந்தைகளுக்கும் விசேட பாரம்பரிய சித்த ஆயுள்வேத முறைகளை ஊக்குவிக்கும் முகமாகவும் வைத்தியரின் அன்னை பிரபல கணித ஆசிரியை அமரர் திருமதி.ப. ஜெயசோதி ஞாபகார்த்தமாகவும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

வைத்தியசாலையின் அறிவித்தல் பலகை அறிவிப்பினை மட்டுமே கொண்டு நடத்தப்பட்ட இந் நிகழ்வில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றினர். பரிசுகளை வாங்குவதற்காக கண்டி, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்கள் உட்பட அனைத்து பகுதிகளிலிருந்து வந்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சமயத் தலைவர்கள் ஆசியுடனும் பல பிரமுகர்களின் பிரசன்னத்துடனும் இந் நிகழ்வுகள் இனிதே நடந்தன.இவ் விடயங்கள் மக்கள் மத்தியில் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் குழந்தை கிடைத்த தம்பதி ஒருவரின் அனு சரணையிலும் ஒழுங்குபடுத்தலிலும் இவ்விளம்பரம் பிரசுரிக்கப்படு கின்றது.

**விழாக்குழுவினர்:-**

**திரு.க.தங்கராஜசிங்கம்,**
**திரு.இ.ஜெயக்குமார்**

**விழாக்குழு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் :-**
**திரு.கு.ரவிக்குமார், வடமாகாண இணைப் பாளர், தேசிய கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை, வணிகம் மற்றும் கைத்தொழில் பற்றிய அமைச்சு**

# சுஜீவா வைத்திய

## (சுஜீவா தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுர்வேத



### வைத்தியசாலை பதிவு இல. ஆயு / யாப / மசா

109, (நாச்சிமார் கோவிலுக்கு அருகாமை) கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். சேவை நேரம் : காலை 7.00 முதல் நண்பகல் 12.00
மாலை 5.00 வரை வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்வெளிமாவட்ட மக்கள் வருவதற்கு முன் கட்டாயமாக தொலைபேசியில்
தொலைபேசி இல : 077 559 4147, 021 568 5333

**Dr.ஜெ.ஜெயலன் (DAM)** மருத்துவ பதிவாளர் :
அரச பதிவு இல. 13461
24 ஆவது பரம்பரை

**Dr.ச.ஜெயலன் (DAM)**
அரச பதிவு இல. 12128, 25 ஆவது பரம்பரை (முன்னாள்
விரிவுரையாளர் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி)

சுஜீவா வைத்தியசாலையில் குழந்தையின்மைக்காக சிகிச்சை பெற்று தாய்மைப் பேறடைந்து பிறந்த குழந்தைகளில் ஒவ்
தெரிவு செய்யப்பட்ட 10 குழந்தைகளுக்கு (2012 முதல் 2016 வரை) பரிசுகள் வழங்கும் நிகழ்வின் போ


**கண்காட்சி**











**சட்டத்தரணி மு.றெமீடியஸ்**

**திரு.க.தங்கராஜசிங்கம் அவர்கள் முன்னாள் M.M.C**

**திரு.ஞா.பரதன் அவ**
**(முகாமையாளர் இலங்கை வங்கி**






**திருமதி பவானி அவர்கள் பிரான்ஸ்**

**பாதர் இ.ரதீஸ்வரன் ப**
**Vethesta Vission For Di**






**சி.சிந்தியா (மருத்துவ பீட மாணவி France)**






**திரு.ஈ.தங்கராஜா**

**Dr.ஜெ.ஜெயலன்**

**கலாநிதி நா.தனேந்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாலை

## (வைத்தியசாலை)

/ 63

வரை, மாலை 3.00 முதல்
தொடர்பு கொண்டுவரவும்

**Dr.K.O.இராஜரட்ணம் (RIMP)**
**அரச பதிவு இல. 6067,**
**24 ஆவது பரம்பரை**

வாரு வருடமும் குலுக்கல் முறையில்
து (20.08.2017)





சமய வழிபாடுகள் மங்கல விளக்கேற்றுதல்



விழாவில் கலந்து கொண்டோர்



Dr.Mrs.சியாமளா துரைரட்ணம் அவர்கள் (ஆணையாளர், சுதேச திணைக்களம், வடமாகாணம்)



Dr.N.யோகராஜன் அவர்கள் (பணிப்பாளர் - தொழில்நுட்ப கல்வி பயிற்சி திணைக்களம் தலைமைச் செயலகம்)



ர்கள் 
டி. ஸ்ரான்லி வீதி)

து.விவேகானந்தக் குருக்கள் இ.விசாகரத்தினக் குருக்கள் திரு.எம்.எல்.எம்.லாகிர் அவர்கள் Dr.க.இராஜரட்ணம்



ணிப்பாளர்
ifferniyable

திரு.சி.செந்தூரன் B.sc Agriculture ஜனாதிபதி செயலகம் திருமதி.செ.நவீனா (MLT France)



திரு.இ.விஜயசூரியா திருமதி யோ.மாலதி அவர்கள் திரு.மா.சிதம்பரநாதன் (முன்னாள் விரிவுரையாளர், இராமநாதன் அக்கடமி)



திரன் Dr.திருமதி ச.ஜெயலன் திருமதி இ.சுசீலா திருமதி த.சிவகங்கை அவர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசப்பற்றாளன் போன்று இனியும் நடிக்க வேண்டாம்

## விஜயதாஸவிற்கு அஜித் பெரேரா சாட்டையடி

(கொழும்பு)

தேசப்பற்றுள்ளவர் போன்று பொய்யாக நாடகம் நடித்து உண்மையை மறைக்க இனியும் முற்பட வேண்டாம் என பதவி பறிக்கப்பட்ட விஜயதாஸ ராஜபக்ஷ எம்.பி. யிடம் பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா கடிந்து கொண்டார்.





அமைச்சரவையில் இருப்பதற்கு தான் வெட்கப்படுகின்றேன் என அமைச்சர் விஜயதாஸ கூறியுள்ளார். அப்படியானால், தன்னுடைய பதவி நீக்குவதற்கான கடிதம் கிடைக்காதிருந்தால், இருப்பதற்கு வெட்கப்படும் அமைச்சரவையில் தொடர்ந்தும் இருப்பீர்களா? எனவும் அவரிடம் பிரதி அமைச்சர் கேள்வி எழுப்பினார். உண்மையான பிரச்சினையை மறைத்து பொய்யாக நாட்டுப் பற்றாளர் போன்று நடிக்க வேண்டாம். அலரிமாளிகைக்கு சட்டமா அதிபரை அழைத்து வந்து அவரை அச்சுறுத்தியதாக பதவி நீக்கப்பட்ட விஜயதாஸ கூறியுள்ளார். இது மிகவும் பொய்யான ஒரு குற்றச்சாட்டு. இதனை முற்றாக மறுக்கின்றோம்எனவும்அவர்மேலும், தெரிவித்தார். (இ-7)

# திருமலை அபிவிருத்தியில் பங்கெடுக்க ஜப்பான் ஆர்வம்

(கொழும்பு)

திருகோணமலையின் அபிவிருத்தியில் பங்கெடுக்க ஜப்பான் ஆர்வம் கொண்டுள்ளது என்று இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கெனிச்சி சுகனுமா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிழக்கின் சமூக, பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகவும் திருகோணமலை நகரின் அபிவிருத்தி தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

திருகோணமலை அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை வரைய ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சிங்கப்பூருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் பங்கெடுக்க ஜப்பானும் விருப்பம் கொண்டுள்ளது என்று ஜப்பானிய தூதுவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதியிடம் ஐ.தே.கவினர் கோரிக்கை

ஊழல் மற்றும் மோசடிக்காரர்களுக்கு எதிரான வழக்கு நடவடிக்கையை விரைவுபடுத்த பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியை நேற்று முன்தினம் இரவு சந்தித்தனர்.

இதன்போது, ஊழல் மற்றும் மோசடிகள் குறித்த வழக்குகள் தாமதப்படுத்தப்படுவது குறித்து ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு விளக்கமளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களது கருத்துக்களைக்கேட்டறிந்த ஜனாதிபதி, இது தொடர்பான பொறிமுறையொன்றை உருவாக்க இணக்கம் வெளியிட்டதாகவும் அறியமுடிகின்றது. (இ-7)

# விஜயதாஸ ராஜபக்ஷவை நீக்கியமை பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது

## ஜே.வி.பி.உறுதியான நிலைப்பாடு

விஜயதாஸ ராஜபக்ஷவை நீதி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியமை பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

விஜயதாஸ பணி நீக்கப்பட்டமை குறித்து கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை விஜயதாஸவிற்கு மட்டும் வரையறையானதல்ல. இது ஐக்கிய தேசியக் கட்சியின் உட்பூசலையே வெளிக்காட்டுகின்றது.

அமைச்சுப் பதவியிலிருந்து விஜயதாஸவை நீக்கியதனால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டாது.

ஒட்டுமொத்தமாக இந்த அரசாங்கமே மக்களுக்கு பிரச்சினையாக அமைந்துள்ளது. கட்சியின் விருப்பு வெறுப்புக்களை பூர்த்தி செய்யாத காரணத்தினால் விஜயதாஸ ராஜபக்ஷ பணி நீக்கப்பட்டார்.

அரசாங்கமும் அமைச்சர்களும் தங்களது நலனை அடிப்படையாகக் கொண்டே செயற்பட்டு வருகின்றனர்.

கள்வர்கள் மோசடிக்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மெய்யாகவே அரசாங்கத்திற்கு அவசியமில்லை.



மக்களின் எதிர்ப்பு காரணமாகவே ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது என ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## என்ன சொல்கிறோம்? எப்படிச் சொல்கிறோம்?

"நீங்க எந்திரிங்க" என்கிற ஒரு சாதாரண வாக்கியத்தைக் குறைந்தது ஐந்து விதமாகச் சொல்லலாம்; ஒரு கைதேர்ந்த நடிகரிடம் இதைச் சொல்லச் சொன்னால் பத்து விதமாகக் கூடச் சொல்லிக் காட்டுவார்.

இதே வாக்கியத்தை–

கோபமாகச் சொன்னால் ஓர் அர்த்தம்.

கேலியாகச் சொன்னால் வேறு அர்த்தம்.

புன்னகையுடன் சொன்னால் புது அர்த்தம்.

உரிமையுடன் சொன்னால் இன்னோர் அர்த்தம்.

எந்தவிதமான முகபாவமும் இல்லாமல் சொன்னால் இதுவரை சொல்லப்படாத புது அர்த்தம்.

ஆக, வாக்கியம் என்பது ஒன்றுதான். சொல்லும் தொனிதான் அதற்குப் புது அர்த்தம் கற்பிக்கிறது.

இந்தப் பாகுபாட்டைத் தெரிந்து கொள்ளாத சிலர், பொருத்தமற்ற இடங்களில் பொருத்தமில்லாத தொனியில் சொல்லி வீண் மனஸ்தாபங்களை இழுத்துக் கொள்கிறார்கள்.

நாம் ஒரு சொல்லைக் கையாளக் கற்றுக் கொண்டால் மட்டும் போதாது. அதைச் சரியான தொனியில் சொல்லவும் தெரிந்து கொள்ள வேண்டும்.

எங்கே எந்தத் தொனி செல்லுபடியாகும் என்றும், எது பொருத்தமான தொனி என்றும் புரிந்து கொண்டால்தான் ஒருவர் வெற்றியடைய முடியும்.

ஒருவர் ஒரு மேடையில் ஒருவரைப் பாராட்டித்தான் பேசினார். ஆனால் மக்கள் அதைக் கேலி செய்வதாகப் புரிந்து கொண்டார்கள். ஒரு கண்டனக் கூட்டத்தில் ஒருவர் மற்ற ஒருவரைத் தாக்கித்தான் பேசினார். ஆனால் கூடியிருந்தவர்கள் அதைப் பாராட்டுவதாகவே எடுத்துக் கொண்டார்கள். இந்த இரு தவறுகளுக்கும் என்ன காரணம்? தொனிதான்.

இவர் மிரட்டலாகச் சொல்கிறாரா, அதிகாரத் தொனியில் பேசுகிறாரா, அல்லது கோபமாகப் பேசுகிறாரா? என்ற ஐயம் மற்றவர்களுக்குச் சிறிதளவும் எழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்குக் குரலில் கனிவையும் குழைவையும் அவசியம் சேர்த்துக் கொள்ள வேண்டும். முகத்தில் சிறிதே புன்னகை சேரவேண்டும். முடியா விட்டாலும் அசட்டுச் சிரிப்பாவது அவசியம்.

"வண்டியை நகர்த்திக்குங்க", "காலை எடுத்துக்குங்க", "தள்ளி உட்காருங்க" என்பன போன்றவற்றையெல்லாம் எதிராளிக்குச் சற்றும் ஐயம் வராத தொனியில் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் விடயம் வம்பில் தான் முடியும்.

கோபத் தொனியிலும், கேலித் தொனியிலும், பேசுகிறவர்கள் கூட, மற்றவர்களுக்கு ஐயம் வராதபடி பேச வேண்டும்.

ஆனால் இவை இரண்டும் விவகாரத்தை வளர்க்கும் தொனிகள் என்பதால், இவை தேவைதானா? என்று ஒருமுறைக்கு இருமுறை பரிசீலனை செய்வது உத்தமம்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் உண்ணாவிரதம் தொடர்கின்றது



அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று நான்காவது தினமாகவும் முன்னெடுக்கப்பட்டது.

சைட்டம் தனியார் பல்கலைக்கழகத்தை இழுத்து மூடுக அல்லது அரசுடைமையாக்குக என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த போராட்டம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

கொழும்பு - புறக்கோட்டை மத்திய ரயில் நிலையத்திற்கு முன்பாக கூடாரம் அமைத்து இந்த உண்ணாவிரதப் போராட்டம் தொடர்கின்றது.

இந்த நிலையில் நேற்றைய தினம் இந்தப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் அனைத்துப் பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியமும் உண்ணாவிரதத்தில் இணைந்துகொண்டது. (இ-7)







யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கரவெட்டி பிரதேச செயலகம் பசுமை உற்பத்தித்திறன் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. கரவெட்டி பிரதேச செயலகம் அழகுபடுத்தப்பட்டு காட்சியளிக்கின்றது. அதேவேளை பொலித்தீன் பாவனையை முற்றாக ஒழிப்போம் என பிரதேச செயலகம் உட்பட பல இடங்களில் பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன. (படங்கள்:-மகாலிங்கம்)

# வனவள திணைக்கள அதிகாரிகள் வடக்கு சபைக்கு கட்டுப்படுவதில்லை

## கண்டித்து கடிதம் அனுப்ப தீர்மானம்

வடக்கு மாகாணத்திலுள்ள வனவள திணைக்கள அதிகாரிகள் மாவட்ட, மாகாண நிர்வாகங்களுக்கு கட்டுப்படாது அத்துமீறிய' செயற்பாடுகளில் ஈடுபடுவதாக தெரிவித்து, வனவள திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு வடக்கு மாகாண சபை கண்டனம் தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 103 வது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தால் பிரேரணை முன்மொழியப்பட்டு நிறை வேற்றப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் சட்டத்தில் வனவளதிணைக்களமானது முற்றுமுழுதாக மத்திய அரசின் நிகழ்ச்சி நிரலில் இருந்தாலும் அதன் செயற்பாடுகளினால் பாதிக்கப்படுவது என்னவோ இந்த மாகாணத்தில் வாழுகின்ற பொது மக்களே. பல்வேறு சந்தர்ப்பங்களில் வனவள திணைக்களத்தின் செயற்பாடுகள் அத்துமீறிய வகையிலும், மாவட்ட மாகாண நிர்வாகங்களுக்கு கட்டுப்படாது தன்னிச்சையான எதேச்சை அதிகாரங்களுடன் இயங்குவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தும், தொடர்ச்சியாக அத்து மீறிய செயற்பாடுகளில் இந்த திணைக்களம் செயற்படுவது கவலையளிக்கின்றது.

குறிப்பாக, வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் மூன்று தசாப்தங்களாக அகதிவாழ்க்கை வாழ்ந்த உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்காக வவுனியா வடக்கில் லைக்காமொபைல் தனியார் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் நிலவிய குடி தண்ணீர்ப் பிரச்சினையை கருத்தில்கொண்டு வவுனியா வடக்குப் பிரதேச செயலாளரினால் குடிநீர்க் கிணறு அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. பிரதேச செயலாளரினால் அடையாளப்படுத்தப்பட்ட காணியில் இந்த கிணறுகள் அமைக்கப்பட்டன.

எனினும் அந்த இடத்திற்கு வருகை தந்த வனவளத்துறையினர் கிணறு அமைக்கும் காணியானது தங்கள் திணைக்களத்தின் ஆளுகைக்குள் வருகின்றமையினால்கிணறு அமைக்க வேண்டாமென்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பிரதேசத்திற்கு பொறுப்பான கிராம சேவகரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து கிராமசேவகர் ஸ்தலத்திற்கு சென்று வனவளத்துறையினருடன் பேசியுள்ளார்.

அத்துடன், இடத்தெரிவு பிரதேச செயலாளரினாலேயே செய்யப்பட்டதாகவும் பிரதேச செயலாளருடன் கலந்துரையாடிய பின்னர் இது தொடர்பில் முடிவெடுக்கலாமெனவும் தெரிவித்துள்ளார். எனினும் கிராமசேவகரின் பேச்சையும் செவிமடுக்காத வனத்துறையினர் தோண்டப்பட்ட கிணறுகளை மூடிவிடுமாறும் இல்லையெனில் தாங்கள் கைதுசெய்யப் போவதாகவும் பயமுறுத்தியதை தொடர்ந்து கிணறு மூடப்பட்டுள்ளது. இதனால், குடிநீரின்றி அந்த மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

இதுவிடயமாக பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்தக்காணியானது பல வருடங்களுக்கு முன்னர் பழப்பயிர்ச்செய்கைக்கு [illegible] த்துவதற்காக தனியாருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணியென்றும், அண்மையில் வனவளத்துறையினர் இந்தப்பகுதியில் நடுகற்களை போட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே, இவ்வாறான செயற்பாடுகளை இனியும் அனுமதிக்கமுடியாது. வடக்கு மாகாணத்தில் மாகாண சபை நிர்வாகம் நடைபெறுகின்ற போதும் எம்முடனும் கலந்துரையாடாமல், மத்திய அரசின் கீழ் இயங்கும் மாவட்ட பிரதேச நிர்வாகத்தையும் புறம்தள்ளி தான்தோன்றித்தனமாக தொடர்ந்தும் செயற்படும் வனவளத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு இந்த சபையின் கண்டனத்தை எழுத்துமூலமாக அனுப்பிவைப்பதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான தான்தோன்றித்தனமான செயற்பாடுகளில் திணைக்கள அதிகாரிகளை ஈடுபடுத்த வேண்டாமெனவும் கேட்டுக்கொள்ளுமாறு இந்த உயரிய சபையை தயவாக கேட்டுக்கொள்கின்றேன் என சத்தியலிங்கம் தனது பிரேரணையை முன்மொழிந்தார்.

தொடந்து உறுப்பினர்களால் மேற்படி பிரேரணை ஏற்றுக்கொள்ள ப்பட்டு நிறைவேற்றப்பட்டது. (இ-4)

# பிரிவினைவாதத்தை தூண்டும் வகையில் புதிய அரசியலமைப்பு

புதிய அரசியல் அமைப்பு பிரிவினைவாதத்தை தூண்டும் வகையில் அமைந்துள்ளது என பிரபல அரசியல் விமர்சகர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015 ஜனவரி 8 புரட்சியில் பங்களிப்பு வழங்கிய தரப்பினர் அழுத்தங்களை பிரயோகிக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய நாட்டின் ஆட்சிக் கட்டமைப்பை மாற்றும் நோக்கில் இந்த அரசியல் அமைப்பு மாற்றப்படுகின்றது.

படிப்படியாக தனியான இராச்சியத்தை நோக்கிப் பயணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இந்த அதிகாரங்களை வழங்குவது ஆபத்தானது.

இந்த நாட்டில் இரண்டு இராச்சியங்கள் உருவாவது தமிழ்சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கு பாதகமா னது.

பாரிய பாரதம் இந்தியா, பாகிஸ்தான் என பிளவடைந்ததில் நன்மை கிடையாது.

மேலும் வடக்கு- கிழக்கிற்கு வெளியே வாழ்ந்து வரும் தமிழ் மக்களுக்கு இந்த பிரிவினைவாத தீர்வுத் திட்டத்தில் என்ன நன்மை கிடைக்கும். இவ்வாறான தீர்வுகளினால் சிலவேளைகளில் பிரிவினைவாதிகள் தனிநாட்டு பிரகடனம் செய்யக் கூடும்.

அல்லது வடக்கிலிருந்து 22 மைல்கள் அப்பால் உள்ள 70 மில்லியன் தமிழர்கள் வாழும்தமிழகத்துடன் இணைந்து கொள்ளக் கூடும்.

எனவே தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து ஆட்சி நடத்த வேண்டும்.


தமிழ் பிரபுக்கள் சிங்கள தலைவர்களுடன் இணைந்து ஆட்சியில் பங்களிப்பு செய்ய வேண்டும். இதற்கு நாட்டில் தடைகள் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆவணிச் சதுர்த்தி விரதம்

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய ஆவணிச் சதுர்த்தி விரதம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு ஆரம்பமாகி 1008 சங்காபிஷேகம், பஞ்சமுக அர்ச்சனை என்பன இடம்பெற்று நண்பகல் 12 மணியளவில் அன்னதானம் வழங்கப்படும். மாலை 5.30 மணிக்கு தெய்வீக இசைச் சங்கமம் நிகழ்வு இடம்பெறும். இதில் பாட்டு-நுண்கலைமாணி கமலகாந்தன் வர்ஜிகன், வயலின்-ப.ஷியாம்கிருஸ்ணா, மிருதங்கம்-க.கஜன், கஞ்சிரா- எஸ். சண்முகப்பிரியன் ஆகியோர் கலந்து கொள்வர். மேலும் இரவு 7 மணிக்கு சுவாமி வீதியுலா வந்ததும் சமய அறிவுப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்வழங்கப்படும். இ-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் மிரட்டலால் போப்பாண்டவரின் உதவியை கேட்கும் வெனிசுலா ஜனாதிபதி



(கராகஸ்)

அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தி நிக்கோலஸ் மதுரோ ஆட்சியை அகற்ற முயற்சிப்பதாக கூறப்படுகிறது. இதையடுத்து வெனிசுலா ஜனாதிபதி போப் ஆண்டவர் உதவியை நாடி உள்ளார்.

தென் அமெரிக்க கண்டத்தில் உள்ள வெனிசுலாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஏற்கனவே மோதல் போக்கு இருந்து வருகிறது. இந்த நாட்டில் நீண்ட காலமாக ஜனாதிபதியாக இருந்த ஜாவஸ், அமெரிக்காவுக்கு எதிராக செயற்பட்டு வந்தார்.

2 ஆண்டுகளுக்கு முன்பு அவர் மரணம் அடைந்தார். இதைத்தொடர்ந்து அவரது ஆதரவாளரான நிக்கோலஸ் மதுரோ ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார். அவரும் அமெரிக்காவுக்கு எதிராக செயற்பட்டு வருகிறார்.

இந்த நிலையில் நிக்கோலஸ் மதுரோ ஆட்சியில் பொருளாதார நிலை சீர்குலைந்துள்ளது. அவருக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதனால் வெனிசுலாவில் உள்நாட்டு கலகம் ஏற்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தி நிக்கோலஸ் மதுரோ ஆட்சியை அகற்ற முயற்சிப்பதாக கூறப்படுகிறது. இதையடுத்து நிக்கோலஸ் மதுரோ போப் ஆண்டவர் உதவியை நாடி உள்ளார்.

அமெரிக்க இராணுவத்தின் அச்சுறுத்தலாலும் சர்வதேச அளவில் சில அழுத்தங்களாலும் வெனி சுலாவில் அமைதியற்ற நிலை நிலவுகிறது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது இராணுவத்தை இங்கே ஊடுருவச் செய்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

அமெரிக்காவிடம் இருந்து எங்களுடைய மக்களை காப்பாற்ற வேண்டும். இதற்கு போப் ஆண்டவர் தேவையான உதவிகளை செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். (3-8)

# லிபியாவில் 11 பேர் தலை துண்டிப்பு

## ஐ.எஸ்.தீவிரவாதிகள் அட்டூழியம்

(திரிபோலி)

லிபியா நாட்டின் சோதனை சாவடியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர்கள் 9 பேர் மற்றும் இரு பொதுமக்களின் தலையை ஐ.எஸ். தீவிரவாதிகள் துண்டித்து கொன்றுள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியா நாடுகளில் மட்டுமல்லாது அரபு நாடுகள் பலவற்றிலும் ஐ.எஸ். தீவிரவாதிகள் காலூன்றி இருக்கிறார்கள். அதில் லிபியா நாடும் ஒன்று.

அங்குள்ள கடலோர மாவட்டங்களில் இவர்களின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. தலைநகரம் திரிபோலிக்கு தெற்கே காலிபா கப்தார் என்ற இடம் உள்ளது. இங்கு இராணுவ சோதனை சாவடி செயற்பட்டு வருகிறது.

இந்தச் சோதனை சாவடியில் 9 இராணுவ வீரர்கள் பாதுகாப்பு பணியில் இருந்தனர். அப்போது அங்கு வந்த ஐ.எஸ். தீவிரவாதிகள் அவர்களை சுற்றிவளைத்து பிடித்தனர். பின்னர் 9 பேருடைய தலையையும் துண்டித்து கொன்றார்கள். மேலும் அங்கிருந்த பொதுமக்களில் இரண்டு பேரையும் பிடித்து அவர்கள் தலையையும் வெட்டினார்கள்.

இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட விடயம் அறிந்ததும் கூடுதல் படைகள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் அதற்குள் ஐ.எஸ். தீவிரவாதிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். அவர்களை பிடிப்பதற்காக அனைத்து பகுதிகளிலும் தேடி வருகிறார்கள். (3-8)

# மரியாதையாக நடத்துங்கள்

## பாக்.இராணுவத் தளபதி அமெரிக்காவிடம் வேண்டுகோள்

பாகிஸ்தானுக்கு எதிராக அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை அமெரிக்கா அடுக்கியுள்ள நிலையில், அமெரிக்காவிடம் எந்த உதவியையும் எதிர்பார்க்கவில்லை, மரியாதையாக நடத்துங்கள் என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியான குற்றச்சாட்டுகளால் கடுப்பாகியுள்ள பாகிஸ்தான் சமாளிக்கும் விதமாக பல கருத்துக்களை கூறியுள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிராக பாகிஸ்தானை போல யாரும் போரிட்டது இல்லை என நேற்று முன்தினம் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அந்நாட்டின் இராணுவ தளபதி ஜாவீத் பஜ்வா இஸ்லாமாபாத்தில் அமெரிக்க தூதரை நேற்று முன்தினம் சந்தித்து புதிய கொள்கை குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இதனையடுத்து, "நாங்கள் அமெரிக்காவிடம் இருந்து பொருள் அல்லது நிதிஉதவியை எதிர்பார்க்கவில்லை. எங்களுடைய பங்களிப்புக்கு நம்பிக்கை, புரிதல் மற்றும் அங்கீகாரத்தையே எதிர்பார்க்கிறோம்" என பஜ்வா கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அமைதி நிலவ பாகிஸ்தான் என்ன நடவடிக்கையை எடுத்துள்ளது என அவர் அமெரிக்க தூதரிடம் பட்டியலிட்டு காட்டியுள்ளார். (3-8)

# நீச்சல் குளத்தில் சடலமாக மீட்கப்பட்ட ரஷ்யத் தூதர்



(கார்டோம்)

சூடான் நாட்டுக்கான ரஷ்ய தூதர் மிர்கயாஸ் ஷிரின்ஸ்கிய் கார்டோம் நகரில் உள்ள தனது இல்லத்தில் இருக்கும் நீச்சல் குளத்தில் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

சூடான் நாட்டுக்கான ரஷ்ய தூதராக இருப்பவர் மிர்கயாஸ் ஷிரின்ஸ்கிய். அந்நாட்டின் தலைநகர் கார்டோமில் உள்ள தனது இல்லத்தில் இருக்கும் நீச்சல் குளத்தில் சடலமாக மிதந்துள்ளார். உயர் இரத்த அழுத்தம் காரணமாக அவர் இயற்கையான முறையில் மரணமடைந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சூடான் வெளியுறவு அமைச்சகம் ஷிரின்ஸ்கிய் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளது. அவரது சடலத்தை ரஷ்யாவுக்கு எடுத்துச் செல்வதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (3-8)




# 70 பேருடன் சென்ற படகு கவிழ்ந்தது

## 7பேர் பலி!

பிரேசில் நாட்டில் 70 பேருடன் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 7 பேர் பலியானதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென் அமெரிக்க நாடான பிரேசிலின் வடக்குப் பகுதியில் உள்ள பார் மாநிலத்தில் 70 பயணிகளுடன் படகு சென்று கொண்டிருந்தது. ஆற்றின் நடுவே சென்று கொண்டிருந்தபோது திடீரென படகு விபத்துக்குள்ளானதில் பயணிகள் அனைவரும் தண்ணீரில் விழுந்து தத்தளித்தனர்.

உடனடியாக அங்கு வந்த மீட்புப்படையினர் தத்தளித்த பயணிகளில் 25 பேரை மீட்டுள்ளனர். 7 பேர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் மீதம் உள்ளவர்களை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். படகு விபத்துக்கான காரணம் குறித்தும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (3-8)

# ஏமனில் விமானத் தாக்குதல்

## 35 பேர் பலி!



(சனா)

ஏமனின் சனா நகரில் உள்ள ஹவுத்தி சோதனைச் சாவடிக்கு அருகில் நேற்று முன்தினம்நடத்தப்பட்ட விமான தாக்குதலில் 35 பேர் பலியாகி உள்ளதாக தகவல் கிடைத்துள்ளன.

ஏமன் நாட்டின் அரசுக்கு எதிராக ஈரானின் ஆதரவுடன் உள்நாட்டு ஹவுத்தி புரட்சிப் படையினர் கடந்த இரண்டாண்டுகளாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசுப் படைகளுக்கும் புரட்சிப் படையினருக்கும் நடந்து வரும் மோதலில் பத்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

சர்வதேச ஆதரவு பெற்றுள்ள ஏமன் அரசுக்கு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படைகள் ஆதரவு அளித்து வருகின்றன. அவர்கள் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து விமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். நாட்டின் தலைநகரான சனா பகுதியை கைப்பற்றியுள்ள புரட்சிப் படையினர் அந்நகரை தங்களது ஆளுமைக்கு உட்படுத்தி வைத்துள்ளனர்.

இந்நிலையில், சனா நகரின் எல்லைப்பகுதியில் ஹவுத்தி அமைப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள சோதனைச் சாவடிக்கு அருகில் உள்ள ஹோட்டலில் நேற்று முன்தினம் விமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் சுமார் 30 பேர் பலியாகி உள்ளதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

இடிபாடுகளில் மேலும் பலர் சிக்கியுள்ளதாக கூறப்பட்டதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. மீட்புப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், விமான தாக்குதலில் பலியான 35 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக அங்குள்ள செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் இத்தாக்குதலில் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

இதற்கு முன் அப்பகுதியில் சவுதி கூட்டுப்படை தொடர் தாக்குதல் நடத்தி வந்தது. அமெரிக்க படையினரும் இப்பகுதியில் தாக்குதல் நடத்தி உள்ளனர். இதனால் இம்முறை யார் தாக்குதல் நடத்தினார்கள் என்பதை கண்டறிவதில் குழப்பம் நீடிக்கிறது. (3-8)

# ஹாட்டோ புயலின் சீற்றம்

## சீனா, ஹொங்கொங்கில் 13 பேர் பலி!



ஹாட்டோ புயலின் கடும் சீற்றத்துக்கு சீனா மற்றும் ஹொங்கொங்கில் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆசியாவின் பொருளாதாரமையமாகவிளங்கும்ஹொங்கொங் நகரை ஹாட்டோ புயல் தாக்கியது. மணிக்கு 155 கிலோமீற்றர் வேகத்தில் தாக்கிய இந்த புயலால் கடல் அலைகள் சீற்றத்துடன் நகர வீதிகளுக்குள் பாய்ந்து மோதின.

புயலின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் பல மரங்கள் வேரோடு சாய்ந்தன. வீதிகளில் போக்குவரத்து முற்றிலுமாக பாதிக்கப்பட்டது. மக்காவ் நகரில் புயலுக்கு 5 பேரும், ஹொங்கொங்கில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

புயலின் தாக்கத்தால் மின்கம்பங்கள் சாய்ந்து நகரமே இருளில் மூழ்கித் தத்தளிக்கிறது. இதனால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வீடுகளுக்குள்ளேயே முடங்கி கிடக்கின்றனர். பல மரங்கள் முறிந்து கட்டடங்களின்மீது சாய்ந்து கிடக்கின்றன. ஹொங்கொங் விமான நிலையம் மூடப்பட்டு, சுமார் 450 விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

ஹாட்டோ புயலின் தாக்கம் மக்காவ் நகரையொட்டியுள்ள சீனாவின் தெற்கு பகுதியிலுள்ள குவாங்டாங் மாகாணத்தையும் பதம் பார்த்தது.

மக்காவ் நகரில் புயலில் சிக்கி ஒருவரும், அடுக்குமாடி குடியிருப்பின் 11ஆவது மாடியில் இருந்து தப்பி விழும்போது ஒருவரும், வீதியில் சென்ற லொறி மோதி ஒருவரும் பலியாகினர். மேலும், குவாங்டாங் நகரில் புயல் பாதிப்பால் 4 பேர் பலியாகினர்.

ஹாட்டோ புயல் தாக்கத்தை தொடர்ந்து, மீட்புப் பணிகள் முழு வீச்சில் முடுக்கி விடப்பட்டுள்ளன. தாழ்வான பகுதிகளில் சிக்கியுள்ளவர்களை மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு வருகின்றனர்.

இதுகுறித்து மீட்புப்படை அதிகாரிகள் கூறுகையில், இதுவரை தற்காலிக நிவாரண முகாம்களில் 26,817 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சுமார் 664 ஏக்கர் விளைநிலங்கள் சேதமடைந்துள்ளன. மின்சாரக் கம்பங்கள் அடியோடு சாய்ந்ததால் மின்சாரம் முழுவதும் துண்டிக்கப்பட்டுள்ளது.

நிலச்சரிவு, வெள்ளம் மற்றும் இயற்கை பேரிடர்கள் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டு வருகிறது. பாடசாலைகள் மற்றும் அரசு அலுவலகங்கள் செயற்படவில்லை. பல்வேறு விரைவு நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன. புயலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் மீட்பு பணிகளில் தாமதம் ஏற்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளனர். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை நூலகம்



# மறு சீராய்வு மனு தள்ளுபடி

## சசிகலாவின் சொத்துக்களை முடக்க திட்டம்

(டில்லி)

சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து விடுதலை செய்யக் கோரி சசிகலா தாக்கல் செய்த சீராய்வு மனு உச்ச நீதிமன்றில் தள்ளுபடி செய்யப்பட்டதையடுத்து அவரது சொத்துக்களை முடக்க வாய்ப்பு உள்ளது.

சொத்துக் குவிப்பு வழகில் இருந்து விடுதலை செய்யக் கோரி சசிகலா தாக்கல் செய்த சீராய்வு மனு உச்ச நீதிமன்றில் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதனால் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் 4 ஆண்டுகள் சிறையில் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சசிகலா உள்ளிட்ட 3 பேரும் தலா ரூ. 10 கோடி அபராதத் தொகையை செலுத்த வேண்டும். அப்படி செலுத்தவில்லை என்றால் அவர்களது சொத்துக்களை ஏலம் விட்டு அபராதம் வசூலிக்கப்படும் என்று பெங்களூரைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது,

சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் தலா ரூ. 10 கோடி அபராதம் செலுத்த வேண்டும். அவர்கள் அபராதத்தை செலுத்த தவறினால் கூடுதலாக சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும். அபராதத்தொகையை வசூலிக்கும் நடவடிக்கையை கர்நாடக அரசு இனிமேல் தொடங்கும். 3 பேரும் அபராதத் தொகையை செலுத்தி விட்டால் கூடுதல் தண்டனை அனுபவிக்க வேண்டிய அவசியம் இல்லை. அபராதத் தொகையை கட்டவில்லை என்றால் அவர்களது சொத்துக்களை முடக்கி ஏலம் விட்டு அந்த தொகையை அபராத மாக வசூலிக்க சட்டத்தில் இடமுண்டு.

இதனால் அடுத்தகட்டமாக சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் பெயரில் உள்ள சொத்துககளை முடக்கி ஏலம் விட நீதிமன்றில் மனு தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது என்றார். (3-8)

# அரியலூரில் இடம்பெற்ற

# எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா



(அரியலூர்)

தமிழக அரசு சார்பில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா மாவட்டம் வாரியாக கொண்டாடப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்டத்தில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா நேற்று முன் தினம் நடந்தது.

இதற்காக அரியலூர் அரசு கலைக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பிரமாண்டமான பந்தல் மற்றும் மேடை அமைக்கப்பட்டிருந் தது.

இவ் விழாவில் கலந்து கொள்வதற்காக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும், துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வமும் ஒரே விமானத்தில் சென்னையில் இருந்து திருச்சி வந்தனர்.

திருச்சி விமான நிலையத்தில் அவர்களுக்கு அமைச்சர்கள், மாவட்ட கலெக்டர் மற்றும் அதிகாரிகள் உட்பட அ.தி.மு.க.தொண்டர்கள் வரவேற்பு அளித்தனர்.

விமான நிலைய வரவேற்பு முடிந்த பின்னர் எடப்பாடி பழனிச்சாமி கார் மூலம் நேராக அரியலூருக்கு புறப்பட்டுச் சென்றார். ஓ.பன்னீர்செல்வம் திருப்பட்டூர் பிரம்மபுரீஸ்வரர் கோவிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்து விட்டு அரியலூருக்கு சென்றார்.

விழா மேடை அருகே அமைக்கப்பட்டுஇருந்த எம்.ஜி.ஆர். பற்றிய புகைப்பட கண்காட்சி நேற்று முன் தினம் காலை திறந்து வைக்கப்பட்டது.

இதனை ஏராளமானவர்கள் பார்த்தனர். மேலும் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு எம்.ஜி.ஆர். பற்றிய கவிதை மற்றும் பேச்சுப் போட்டிகள், ஓவிய போட்டிகள் நடத்தப்பட்டன.

நேற்று முன்தினம் மாலை 4 மணி அளவில் விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. விழாவுக்கு தமிழக சட்டமன்ற சபாநாயகர் தனபால் தலைமை தாங்கினார். முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும், துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வமும் முதலில் விழா மேடையில் வைக்கப்பட்டு இருந்த ஜெயலலிதா படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தனர். அதன் பின்னர் எம்.ஜி.ஆர். உருவ படத்தை எடப்பாடி பழனிச்சாமி திறந்து வைத்தார்.

துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அரசு தலைமை கொறடா தாமரை ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பாராளுமன்ற துணை சபாநாயகர் தம்பிதுரை, ஆர். வைத்திலிங்கம் எம்.பி. ஆகியோர் வாழ்த்தி பேசினார் கள்.


இவ் விழாவில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி ரூ.5.53 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்தும், ரூ. 69. 05 கோடி மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதுடன் 11.514 பயனாளிகளுக்கு ரூ.86 கோடியே 71 இலட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி வழங்கி வைத்தார். (3-8)

# 31 ஆம் திகதி புறப்படத் தயாராகும் பி.எஸ்.எல்.வி.சி-39 ரொக்கெட்

ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1-எச் என்ற செயற்கைகோள், பி.எஸ்.எல்.வி. சி-39 ரொக்கெட் மூலம் 31 ஆம் திகதி விண்ணில் ஏவப்படுகிறது.

கடல்சார் ஆராய்ச்சிக்காக ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். வரிசையிலான 7 செயற்கைகோள்களை விண்வெளிக்கு



அனுப்ப இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ முடிவு செய்தது.

அதன்படி ஏற்கனவே 7 செயற்கைக்கோள்கள்ளை திட்டமிட்டப்படி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. இதில் முதலில் செலுத்தப்பட்ட செயற்கைக்கோளின் ஆயுள்காலம் நிறைவடையவிருப்பதை தொடர்ந்து, புதிதாக ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1-எச் என்ற செயற்கைக் கோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது.

இதனை ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. சி-39 ரொக்கெட் மூலம் 31ஆம் திகதி விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

320 தொன் எடையும் 44.4மீற்றர் உயரமும் கொண்ட ரொக்கெட்டில் அனுப்பப்படும் ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1-எச் செயற்கைக்கோள் இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. பூமியில் இருந்து குறைந்தபட்சம் 284 கிலோ மீற்றரிலும், அதிகபட்சம் 20 ஆயிரத்து 657 கிலோ மீற்றரிலும் நிலை நிறுத்தப்படுகிறது.

இதன்மூலம் இயற்கை சீற்றம், பேரிடர் மேலாண்மை, கடல்சார் செயற்பாடுகளை கண்காணிக்க முடியும். ரொக்கெட்டை ஏவுவதற்கான பணிகளில் தீவிரமாக இறங்கியிருப்பதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (3-8)

## பாரதச் செய்தி

# தீயின் பின்னணியில் செல்பி எடுப்பதற்காக ரயில் பெட்டிகளுக்கு தீ வைத்த மாணவர்கள்

(போபால்)

மத்தியப்பிரதேச மாநிலத்தில் செல்பி எடுக்கும் மோகத்தால் மாணவர்கள் ரயில் பெட்டிகளை கொளுத்திய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இன்றைய தலைமுறையினர் அனைவரது கைகளிலும் ஆறாவது விரலாக ஸ்மார்ட் போன் இடம்பிடித்துள்ளது. அதில் செல்பி எடுத்து தங்களது வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்து வருகின்றனர். அந்த புகைப்படங்களுக்கு எத்தனை லைக்குகள் விழுகிறது என்பதில் அனைவருக்கும் போட்டி ஏற்பட்டுள்ளது.

லைக்குகள் பெறுவதற்காக எதை வேண்டுமானாலும் துணிந்து செயலாற்றி வருகின்றனர். ஓடும் ரயில் முன் படமெடுப்பது. அடுக்குமாடி கட்டடத்தில் நின்று போஸ் கொடுப்பது, விலங்குக



ளுடன் செல்பி எடுப்பது ஆகியவை அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில், மத்தியப் பிரதேச மாநிலத்திலுள்ள குவாலியர் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த ரயில் பெட்டிகளுக்கு தீ வைத்து செல்பி எடுக்க முயன்ற மாணவர்களின் செயல் கடும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

கடந்த 4ஆம் திகதி சூஷான் எக்ஸ்பிரஸ் ரயில் குவாலியர் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. அன்றிரவு ரயிலின் இரண்டு பெட்டிகள் திடீரென தீப்பிடித்து எரிந்தன. இதையடுத்து, ரயில் நிலைய ஊழியர்கள் போராடி தீயை அணைத்தனர்.

இதுகுறித்து விசாரணை நடத்த அதிகாரிகள் உத்தரவிட்டனர். இதுதொடர்பாக, ரயில்வே பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்தனர். அவர்கள் ரயில் நிலையத்தில் சி.சி.டி.வி. கமராவை ஆய்வு செய்தனர். அதில் இரு மாணவர்கள் ரயில் நிலையத்தில் நீண்ட நேரம் செலவழித்ததும், அவர்கள் ரயில் பெட்டி அருகில் சென்றதும் பதிவாகி இருந்தது. இதைதொடர்ந்து, அந்த மாணவர்களை அழைத்து விசாரித்தனர்.

முதலில் முன்னுக்கு பின் முரணாக பேசிய மாணவர்கள், இறுதியில் நெருப்பின் பின்னணியில் செல்பி எடுப்பதற்காக ரயில் பெட்டிகளுக்கு தீ வைத்ததை ஒப்புக் கொண்டனர்.

இதனால் அவர்கள் மீது வழக்கு பதிந்து கைது செய்தனர். தொடர்ந்து அவர்களிடம் விசாரணை நடந்து வருகிறது.

வலைத்தளங்களில் லைக்குகள் பெறுவதற்காக, ரயில் பெட்டிகளுக்கு தீ வைத்த மாணவர்களின் செயல் சமூக ஆர்வலர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (8)

# துணிச்சல் இருந்தால் சசிகலாவை நீக்குங்கள்

## தங்க தமிழ்செல்வன் சவால்

துணிச்சல் இருந்தால் பொதுக்குழுவை கூட்டி சசிகலாவை நீக்கி பார்க்கட்டும் என்று தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ. தங்க தமிழ்செல்வன் சவால் விடுத்துள்ளார்.

தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் 18 பேர் புதுவை ஹோட்டலில் தங்கியுள்ளனர். இதில், தங்க தமிழ்செல்வன் நிருபர்களிடம் கூறியதாவது,

எங்களது ஒற்றுமையை காண்பிக்கும் நோக்கத்தில் புதுவையில் 3 நாட்கள் தங்கி இருக்க வந்துள்ளோம். முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை, மாற்ற வேண்டும் என்று ஆளுநரிடம் கோரிக்கை வைத்துள்ளோம். பொறுத்திருந்து பாருங்கள். நல்ல செய்தி வரும்.

சசிகலாவை நீக்குவோம் என்கிறார்கள். துணிச்சல் இருந்தால் பொதுக்குழுவை கூட்டி சசிகலாவை நீக்கிப் பார்க்கட்டும். பொதுக்குழுவை கூட்டினால் அதில் அவர்கள் அதிக பெரும்பான்மையை காட்ட வேண்டும்.

எடப்பாடி பழனிச்சாமியும் ஓ.பன்னீர்செல்வமும் இணைந்து பெரும்பான்மையை காட்ட முடியுமா? அவர்கள் பொதுக்குழுவை கூட்டினால் தான் பொறுப்பாளர்களும் தொண்டர்களும் யார் பக்கம் இருக்கிறார்கள்? என்பது தெரியவரும் நாங்கள் எடுத்த சபத்தை விரைவில் முடித்து காட்டுவோம் என்றார். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணி நயப்பு விழா

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி-2017



மணிவிழா நாயகன்

திருவாளர். சுல்தான் முகிதீன் மொகமட் அஸ்ரப் அவர்கள்

எமது பாடசாலையில்

பதவிக் கால ஆரம்பம்
2015-11-16

பதவிக் கால நிறைவு
2017-08-25

தாம் மண்ணில் தடம் பதித்து
தரணி எங்கும் சேவை செய்து
இறுதிக் காலமதில் சொர்க்க மண்ணின் நினைவுகளில்
விடைபெறும் நேரம் இதுவோ

ஈராண்டு சேவைக்காய்-எம்
யாழ் மண்ணைத் தேர்ந்தெடுத்து
சோதனைகள் பல வந்த போதும்
சாதனை படைத்த எம் மணிவிழா நாயகனே!

யுத்தத்தின் சத்தத்தில் பாடசாலை கீதம் அது
இசை தவறி நின்றபோது
சரியான கீதம் ஒன்றை-எம்
கல்லூரி வளாகமதில் இசைக்கச் செய்தீரே!

காரியாலய கோவைகளெல்லாம்
நேர்முறையாய்ப் புதுப்பித்து
பாடசாலை பல வளங்களையும்-எம்
கல்லூரியில் சேர்த்தவரே

குறைந்த சேவைதன்னில் நிறைவு காணும் நாயகனே!
வளம் பல பெற்று வையகத்தில்
வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்
வாழ்க பல்லாண்டு..

Congratulations

யாழ்/ஒஸ்மானியாக் கல்லூரி. (215) ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள்.


# எல்லாமே பொய்!

## நேரம் வரும் போது உண்மை வெளிவரும் -நாமல்



நாட்டுக்கு பாதகமான செயல்களை இந்த ஆட்சியாளர்கள் முன்னெடுக்கும்போது, அதனை தட்டிக்கேட்டமைக்காகவே நீதி அமைச்சர் பதவி நீக்கப்பட்டுள்ளார் என்பதை எத்தனை பேர் அறிவர்? என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே நாமல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"விஜயதாஸ ராஜபக்ஷவை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க ஐ.தே.கட்சியினர் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டனர். இறந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடயத்தில் நீதியை நிலைநாட்ட முடியாமல் போனமைக்கு இவர் தான் காரணம் என்ற போலியான காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

நாம்தான் பிரச்சினை என்றால் இரண்டு வருடங்கள் ஏன் பொறுந்திருந்தார்கள்? கடந்த அமைச்சரவை மாற்றத்தின் போது கூட விஜயதாஸவை நீக்கியிருக்க முடியும்.

அது தவிர ஒருவருக்கு நீதி வழங்கும் விடயத்தில் அமைச்சரின் தலையீடு இருக்க முடியாது. அப்படி தலையீடு இருந்தால் அது நீதியாகவே இருக்க முடியாது. இக்கருத்தை சிந்தித்தாலே எல்லாம் பொய்யானது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

இன்று இலங்கை சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்தும் சுயநலன்களை அடிப்படையாக கொண்டும் சர்வதேச ஆட்சியாளர்களின் கால்களில் மண்டியிட்டுக் கிடக்கின்றது.

சர்வதேசமானது இலங்கையில் தமிழர்களின் விடயங்களில் நீதியை நிலைநாட்ட சர்வதேச நீதிபதிகளின் தலையீட்டை எதிர்பார்க்கின்றது.

இதற்கு விஜயதாஸ ராஜபக்ஷ இடம் கொடுக்கவில்லை. இது போன்று இன்னும் சில விடயங்கள் உள்ளன. அதனை நேரம் வரும் போது உண்மையை வெளியிடலாம் என்று கருதுகின்றோம்.

இது போன்று தான் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க துறைமுக அமைச்சில் இருந்து கொண்டு சர்வதேச நாடுகளில் இலங்கையை அடமானம் வைப்பதை தனது அமைச்சின் மூலம் தடுத்து நிறுத்தினார்.

நல்லாட்சி அவரை குறித்த அமைச்சிலிருந்து நீக்கி தனது விடயங்களை சாதித்துக் கொண்டது. இவற்றையெல்லாம் வைத்து சிந்தித்தால் இவற்றின் உண்மை தன்மைகளை அறிந்து கொள்ளலாம்.

எங்களது இலங்கை நாட்டை இவ்வாட்சியாளர்களிடமிருந்து காப்பாற்ற அனைவரும் ஒன்றுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1171

கௌரி




நசி




லதா




சியான்




கமல்




வினிதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமணரத்ன தேரரால் பொலிஸாருக்கு எதிராக உருவப்பொம்மை எரிப்பு





மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனக்கெதிராக எவ்வித விசாரணையுமின்றி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்தமையைக் கண்டித்து நேற்று முன்தினம் புதன்கிழமை மங்களராம விகாரையின் விகாராதிபதியான அம்பிட்டிய சுமணரத்ன தேரர் பொலிஸாருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக பொலிஸாரின் உருவப் பொம்மையை அவரது விகாரை பகுதியில் வைத்து தீயிட்டு எரித்து எதிர்ப்பை தெரிவித்தார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் கெவிலியாமடு விகாரையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுவந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மதுபோதையில் கடமையில் ஈடுபட்டபோது அவருக்கும் தேரருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தினையடுத்து மங்களராம பொலிஸ் நிலைத்திற்கு சென்று தேரர் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த பொலிஸாரை கைதுசெய்து சட்டவைத்திய பரிசோதனையில் மதுபோதையில் இருந்ததாக சான்றிதழ் வழுங்கப்பட்டது. இதனையடுத்து குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்ட நிலையில். தற்போது அவர் கடமையில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்த நிலையில் தேரர் தன்னை அடித்ததாக தேரருக்கு எதிராக குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இதேவேளை வேறு ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தேரர் தன்னை அடித்ததாகவும் வைத்தியசாலையில் தான் அனுமதிக்கப்பட்டதாகவும் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இது தொடர்பில் தேரர் தெரிவிக்கையில்,

சம்பவம் தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது இது தொடர்பாக பொலிஸார் வாக்கு மூலம் எதுவும் பெறவில்லை. இதேவேளை அப்பாவி மக்களுக்காக குரல் கொடுத்ததினால் நான் உயிர் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ள நிலையில், எனக்கும் விகாரைக்கும் பாதுகாப்பு கொடுக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் களினால் எனக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதனால் பொலிஸார் மீது எவ்விதமான நம்பிக்கையும் இல்லாமல் போயுள்ளதுடன் இது எனக்கு எதிராக பொலிசாரால் சோடிக்கப்பட்ட செயல் எனவும் குறித்த செயலை வன்மையாக கண்டிப்பதுடன் இதற்கு எதிராக பொலிசாரின் உருவப் பொம்மையை எரித்து எதிர்ப்பை தெரிவிப்பதாகவும் தேரர் தெரிவித்தார். (இ-7)

# குருநகர் முகத்துவார பகுதியில் வெளிச்சவீட்டுடன் இடிதாங்கி அமைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குருநகர் முகத்துவாரம் கடற்கரைப் பகுதியில் வெளிச்ச வீட்டுடன் கூடிய இடிதாங்கியை அமைத்து தருமாறு அப்பகுதி மீனவர் சமூகத்தினர் சார்பாக குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி கழகத்தினர் யாழ். மாவட்ட அரச அதிபருக்கு மகஜர் ஒன்றை கடந்த 16 ஆம் திகதி அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் குருநகர் முகத்துவாரம் கடற்கரை பிரதேசத்தில் கடற்றொழிலாளர்கள் கரையொதுங்கும் பகுதியில் வெளிச்சவீடும் (கலங்கரைவிளக்கு) அதில் இடிதாங்கியும் பொருத்தப்பட்டு இருந்தது. அப்போது கடற்றொழிலாளர்களுக்கு மின்னல்தாக்கும்அனர்த்தம் எவையும் ஏற்பட்டிருக்கவில்லை.

ஆனால்போருக்கு பின்னரான காலப்பகுதியில் குறித்த வெளிச்ச வீடு சேதமடைந்து தரைமட்டமாக்கப்பட்டது.

குறித்த வெளிச்ச வீட்டினை அமைத்து தருமாறு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரிடமும் கோரிக்கை விடுவிக்கப்பட்டிருந்தும் எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இது வரை 7 மீனவர்கள் மின்னல் தாக்கத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர். கடந்த 15 ஆம் திகதியும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மின்னல் தாக்கத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறான உயிரிழப்புக்கள் நிகழ்வதற்கு அதிகாரிகள், அரசியல்வாதிகளின் அசமந்தப் போக்குதான் காரணமாக உள்ளது. எனவே மேலும் அப்பாவி மீனவர்களின் உயிரைப் பலி கொடுக்காமல் இருப்பதற்கு மிக விரைவாக அப்பகுதியில் வெளிச்சவீடும் இடிதாங்கியும் அமைத்து தருமாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறித்த மகஜரினை யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகத்துக்கு அனுப்பிவைத்துள்ளனர். அத்துடன் குறித்த மகஜரினை யாழ்ப்பாண பிரதேச செயலரிடம் கடந்த 16 ஆம் திகதி கையளித்துள்ளார். (இ-9-106)

# கையைப் பிடித்தவர்கள் கம்பிக்குள்

(யாழ்ப்பாணம்)

கடைக்குச் சென்ற யுவதியின் கையைப் பிடித்து துஷ்பிரயோக முயற்சிமேற்கொண்டதாக கைது செய்யப்பட்ட 8 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 6ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி.ஏ.யூட்சன் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 19ஆம் திகதி இரவு 7 மணியளவில் தெல்லிப்பழை வர்தலைவிளான் சந்தியில் உள்ள கடையொன்றுக்கு தனிமையில் சென்ற யுவதியின் கையைப்பிடித்து இழுத்து துஷ்பிரயோக முயற்சி மேற்கொண்டதாக கைதான 22 வயதிற்குட்பட்ட எட்டு சந்தேக நபர்கள் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இருப்பினும் சம்பவத்துடன் தொடர்புடைய எட்டு சந்தேக நபர்கள் தலைமறைவாகியிருந்த நிலையில் கடந்த 22ஆம்திகதி தெல்லிப்பழை பிரதேசத்தில் வைத்து காங்கேசன் துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை எதிர்வரும் 6ஆம்திகதி வரை விளக்கமறியலில்வைக்க மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-10-104)

# விநாயகர் சதுர்த்தி விசேட பூஜைகள்

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கோப்பாய், இருபாலை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக்கிழமை விசேட பூஜை வழிபாடுகளும், விசேட தீர்த்தவாரி நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

காலை 6 மணி முதல் மாலை 4 மணிவரை பக்தர்கள் கற்பகப் பிள்ளையார் தீர்த்த கேணியிலிருந்து தீர்த்தம் எடுத்துவந்து தமது கரங்களால் கற்பகப் பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

மாலை 4 மணிக்கு கற்பகப் பிள்ளையாருக்கு விசேட அபிஷேகமும், அதனைத் தொடர்ந்து வசந்தமண்டபூஜையும் இடம்பெற்று வெளி வீதியுலாவும் நடைபெறவுள்ளது. (இ-3)

# மாடு திருட்டு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தெற்கில் வீடொன்றில் இருந்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மாடொன்று திருடப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் கடந்த 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-134)

# செப்டெம்பர் 1 முதல் இலத்திரனியல் அடையாள அட்டை

செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் புதிய இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கப்படும் என்று ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியான் குணதிலக தெரிவித்தார்.

முதல் தடவையாக அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள இருப்பவர்களுக்கு இந்த வகை அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்த வகை அடையாள அட்டைக்காக புதிய புகைப்படம் அறிமுகப்படுத்த உள்ளதாகவும் ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியான் குணதிலக கூறியுள்ளார். (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: சூரிசெவ் 3 இல்<br>தகைமை/தொழில்:O/L/கட்டார்<br>தொ.இ: B/7670 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 27செவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BSc IT<br>தொ.இ: G/7674 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 36<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்:O/L/வியாபாரம்<br>தொ.இ: B/7677 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 10சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:HNDTM, BSc/ தனியார் தொழில்<br>தொ.இ: G/7675 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 23செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: ஜேர்மன் PR<br>தொ.இ: B/7678 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7676 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 73 செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/7679 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/7681 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் ராஜிதவுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## கூட்டு எதிரணி மும்முரம்



(கொழும்பு)

ஏழு குற்றச்சாட்டுக்களின் கீழ் சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்னவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கவுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் சொய்ஷா தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவான கையொப்பம் பாராளுமன்றத்தில் பெறப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கம் மதிப்பீடு செய்த பெறுமதியை விடக் குறைந்த பெறுமதிக்கு மோதர மீன்பிடி துறைமுகத்தைக் குத்தகைக்கு விடல், ஊழல் மோசடி விசாரணைகளில் கலந்துகொள்ளாமல் தவிர்த்து வருகின்றமை உட்பட ஏழு குற்றச்சாட்டுக்கள் இவருக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சவர்க்கார உற்பத்தி பயிற்சிநெறி நாளை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் நாளை மறுதினம் 27 ஆம் திகதி இலவசமாக திரவ சவர்க்காரம் (Liquid soap), திரவ கைகழுவும் சவர்க்காரம் (Liquid handwash ) என்பன உற்பத்தி செய்யும் பயிற்சிநெறி நடைபெறவுள்ளதால் மேற்படி பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்ய விரும்பும் சுய தொழில் முயற்சியாளர்கள் மற்றும் இப் பயிற்சி நெறியில் பங்கு பெற விரும்பும் பயனாளிகள் 25.08. 2017 இற்கு முன்னராக கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளமுடியுமென பிரதேச செயலாளர் அறியத் தந்துள்ளார். மேலதிக தகவல்களுக்கு 021 226 4958 என்ற தொலைபேசி இலக்கத்தினை தொடர்பு கொள்ளமுடியும். (இ

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்கு கந்தர் வளவு ஸ்ரீ மஹா கணபதிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. , (இ-10-105)

# குற்றம் செய்திருந்தால் ஒப்புக்கொள்ள வேண்டும்

## பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்

தனிப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமைவாக சிலர் ஊடகங்களைப் பயன்படுத்தி தனக்கெதிராக வதந்திகளைப் பரப்பி வருவதாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர குற்றம் சாட்டியுள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் ஊழியர் ஒருவரை பொலிஸ்மா அதிபர் தாக்கச்சென்றது போன்று அண்மையில் காணொலி ஒன்று வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையிலேயே பொலிஸ்மா அதிபர் மேற்படி குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்தார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



குற்றம் செய்திருந்தால் அது பிழை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதே சாலச்சிறந்த நடத்தை என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் சமூக ஊடகங்களில் வெளியாகிய பொலிஸ்மா அதிபரின் காணொலி தொடர்பில் நேரடியாக அவர் இதுவரை எதுவும் கருத்து வெளியிட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெளிவிவகார அமைச்சர் மாரப்பனவுடன் அமெரிக்கத் தூதுவர் அதுல் சந்திப்பு

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப்பிற்கும் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவிற்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு நேற்று முன் தினம் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

இதன்போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.



புதிய வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற திலக் மாரப்பனவை, முதலாவது வெளிநாட்டு இராஜதந்திரியாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தித்திருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்க தூதுவர், வெளிவிவகார அமைச்சரை நேற்று முன்தினம் சந்தித்துள்ளார். (இ-7)

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் மஹோற்சவ ஏற்பாடு குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவ ஏற்பாட்டுக் கூட்டம் 28.08.2017 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய கண்ணன் மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த ஏற்பாட்டுக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்களை தவறாது கலந்து கொண்டு ஆலோசனைகளையும் ஒத்துழைப்பினையும் வழங்கி உதவுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ

# கந்தபுராண தொடர் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 ணியளவில் கதிர்காமக் கந்தன் பஜனைக் குழுவினர் வழங்கும் பஜனை நிகழ்வும் " சொல்வேந்தர்" பொன். சுகந்தன் வழங்கும் கந்தபுராணம் தொடர் சொற்பொழிவு நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (இ

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக விஜயதாஸ

## கூட்டு எதிரணி நிராகரிப்பு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி சார்பாக எந்தவொரு பொது வேட்பாளரையும் நிறுத்துவதற்கான எண்ணம் இல்லை என்றும் குறிப்பாக முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை பொது வேட்பாளராக முன்னிறுத்தப் போவதாக வெளியாகிவரும் தகவல்களையும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி நிராகரித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம கலந்து கொண்டார்.

இதன்போது முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் இணைவது மற்றும் அவரை பொது வேட்பாளராக எதிர்வரும் தேர்தல்களில் நிறுத்துவது குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் அமுனுகம, அப்படியொரு தீர்மானம் தமது கட் இன்னும் எடுக்கவில்லை என்று கூறினார்.

இருந்த போதிலும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் இணைந்துகொள்ள விருப்பம் என்றால் அவரை இணைத்துக் கொண்டு முன் செல்வதற்கும் தமது கட்சி தயாராக இருப்பதாகவும் திலும் அமுனுகம தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியுடன் இன்று அரச வைத்தியர்கள் சந்திப்பு

(கொழும்பு)

மாலபே தனியார் மருத்துவ கல்லூரி தொடர்பில் ஜனாதிபதியுடன் முக்கிய சந்திப்பு ஒன்று இடம் பெறவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பு இன்று இடம் பெறவுள்ளதாக வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியுடன் இடம்பெறும் சந்திப்பு மிகவும் முக்கியமானதாக இருக்கும் என்று இந்த சந்திப்பின் போது கல்லூரியுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரும் பங்கேற்கவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 150 | 100 | 160 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 150 | 85 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 230 | 300 | 300 |
| தக்காளி | 160 | 200 | 120 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 60 | 80 | 80 |
| கோவா | 80 | 120 | 80 | 100 | 120 |
| கரட் | 100 | 200 | 140 | 160 | 160 |
| பூசணி | 60 | 100 | 40 | 60 | 60 |
| புடோல் | 50 | 100 | 50 | 100 | 70. |
| வாழைக்காய் | 80 | 120 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 170 | 200 | 140 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 120 | 120 | 130 |
| பாகற்காய் | 150 | 300 | 150 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 40 | 120 | 70 | 80 | 70 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 40 | 80 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 70 | 100 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 200 | 100 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 80 | 150 | 40 | 60 | 80 |
| போஞ்சி | 180 | 200 | 100 | 200 | 140 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 80 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 20 | 30 | 30 | 35 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | - | - | - |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | 200 | 250 |
| முள்ளங்கி | 50 | 100 | 30 | 60 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 10 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 50 | 50 | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவதேன்?

– *தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒவ்வொருவர் ஒவ்வொரு தீர்வு என்றிருப்பது முறையோ!

வடக்கு மாகாண சபையின் 103ஆவது அமர்வு நடந்து முடிந்துள்ளது.

இன்னும் எத்தனை அமர்வுகள் நடக்கும் என்பது யாரும் அறியார். எனவே நடக்கக் கூடிய அமர்வுகள் – மாகாண அரசுக்கு இன்னும் இருக்கக்கூடிய சொற்ப காலத்தையேனும் நல்ல முறையில் நடத்தினால் அதுபோதும் என்பது மக்களின் நிலைப்பாடாக உள்ளது.

எனினும் இது எந்தளவுக்குச் 'சாத்தியமாகும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில், தமிழ் அரசியல் தரப்புக்கள் ஒன்றுபட்டு ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் தரப்புக்களை ஒற்றுமைப் படுத்துவதில் தமிழ் மக்கள் பேரவை முன்னின்று செயலாற்ற வேண்டும்.

தமிழ் மக்களுக்கான தீர்வு என்ற விடயத்தில் மக்கள் பிரதிநிதிகள் மட்டுமே முடிவெடுக்க முடியுமே என்று எவர் நினைத்தாலும் அது தலையால் அழியும் தீர்மானம் என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை.

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் எங்களுக்குள் ஒற்றுமைப்பாடு ஏற்பட்டாக வேண்டும். தமிழ் மக்களின் உரிமை என்ற விடயத்தில், தமிழ்த் தரப்புகள் ஒவ்வொன்றும் தாம் தாம் நினைத்தவாறு தீர்வைத் தீர்மானிக்க முடியாது.

மாறாக தமிழ்த் தரப்புகள் அனைத்தும் ஒன்றுபட்டு – ஒன்றுகூடி ஒரு முடிவுக்கு வருவது கட்டாயமானது.

இத்தகையதொரு ஒற்றுமைப்பட்ட முடிவை எடுக்கக்கூடிய அமைப்பாக தமிழ் மக்கள் பேரவை உள்ளது.

தமிழ் மக்களின் இயக்கமாக இருக்கக் கூடிய தமிழ் மக்கள் பேரவை, அனைத்து தமிழ் அரசியல் தரப்புக்களையும் ஒன்றுபடுத்தி எங்களுக்கான அரசியல் தீர்வு எது என்பதை நிர்ணயம் செய்ய வேண்டும்.

இதனை தமிழ் மக்கள் பேரவை தயாரித்துள்ள அரசியல் தீர்வுத்திட்ட முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும்.

இதைவிடுத்து ஒரு தரப்பு சமஷ்டி என்று கூற இன்னொரு தரப்பு சமஷ்டிக்கு இணையான தீர்வு என்று கூற, கதை கந்தலாகிப் போவதைத் தவிர வேறு எதுவும் நடக்காது.

ஆக, புதிய அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் என்பது அரங்கேறுமாக இருந்தால் அந்த அரங்கேற்றத்துக்கு முன்னதாக தமிழ்த் தரப்புக்கள் ஒன்றுபட்டு; உடன்பட்டு தமிழ் மக்களுக்கான தீர்வு எது என்பது உறுதியாக அறுதியாக தீர்மானிக்கப்பட்டு அதில் சகலரும் உடன்பாட்டு ஒப்பமிட வேண்டும்.

இதைத் தமிழ் மக்கள் பேரவை செய்தாகுவது அவசியம். இதுபற்றி மக்களின் கருத்துக்களை அறியும் பொருட்டு மாவட்டங்கள் தோறும் கருத்துக் களங்களை நடத்துவதும் ஏற்புடையதாகும்.

எனவே இன்னும் இன்னும் முரண்படாமல் – தேர்தல் அரசியலுக்காக சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பழுதாக்காமல் தமிழினம் என்ற ஒரே குறிக்கோளுடன் எங்கள் தீர்வு எது என்பதை நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு கைஉயர்த்திப் பிரகடனம் செய்வோம்.

இதை தமிழ் மக்கள் பேரவை செய்தாகட்டும்.

# பயங்கரவாத தடைப்பிரிவின் பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிமன்றம் பிடியாணை

கொழும்பு பயங்கரவாதத் தடைப்பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எல்.ஏ ரணசிங்க சாட்சியமளிக்க நீதிமன்றம் வருகை தராமையால் வழக்கு விசாரணை முடிவடையாமல் எதிரி 10 வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளார் என எதிரி தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசா தனது வாதத்தில் குறிப்பிட்டார்.

2007ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்ட கொழும்பு பொரல்ல புலனாய்வுப் பிரிவின் பொலிஸ அதிகாரியான ரங்கவடி தர்மதாசவிற்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புலனாய்வுத் தகவல்களை வழங்கியதாகவும் வெடிமருந்து. 35 துப்பாக்கி ரவைகளையும் சையினட் வில்லைகளையும் உடமையில் வைத்திருந்ததாகவும் 2010ஆம் ஆண்டு 3ஆம் மாதம் முதலாம் திகதி சட்டமா அதிபரினால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது

இந்த வழக்கு விசாரணையில் அரச தரப்பின் முக்கிய சாட்சியான பொலிஸ அத்தியட்சகர் எஸ்.எல்.ஏ ரணசிங்கவிற்கு கடந்த 2010ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தொடக்கம நீதிமன்றில் ஆஜராகும்படி கடந்த 7 வருடங்களாக பல அழைப்பாணைகளை அனுப்பிய போதிலும் அரச சாட்சி நீதிமன்றில் ஆஜராக வில்லை.

மேலும் பொலிஸ் அத்தியட்சகரான இந்த சாட்சி நிதி மோசடி வழக்கில் தொடர்பு பட்டுள்ளதாக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையினால் நீதிமன்றில் ஆஜராகாமைக்கான காரணங்களாக முன்னர் கூறப்பட்டது. கடந்த சில வருடங்களாக சுகவீனம் காரணமாக நீதிமன்றிற்கு சமுகமளிக்க முடியவில்லையென நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்கள் கூறப்படுகின்றன. இந்த சாட்சியின் நடவடிக்கைகள் நீதிமன்றத்தை அவமதிக்கும் செயற்பாடாகும்.

கடந்த தவணை அரச தரப்பிற்கு இறுதித் தவணை வழங்கப்பட்டது. ஆனால் இன்றும் இந்த அரசசாட்சி நீதிமன்றிற்கு சமுகமளிக்க வில்லை இந்த வழக்கின் எதிரி கடந்த 10 வருடங்களாக எந்தவித விசாரணையோ அல்லது விடுதலையும் இன்றி தொடர்ந்து விளக்கமறியலில் உள்ளார்.

எனவே சட்டமா அதிபர் வழக்கை நடத்தி முடிக்க வேண்டும் அல்லது நீதிமன்றம் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதத்தை முன்வைத்ததையடுத்து.

கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க அரச சட்டத்தரணியிடம் அரச சாட்சி நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக் கூடிய வைத்திய அறிக்கையை நீதிமன்றிற்கு சமர்ப்பிக்காமை மட்டுமின்றி கடந்த 7 வருடங்களாக இந்த வழக்கு விசாரணை முடிவடையாமல் எதிரி தொடர்ந்தும் சிறையில் உள்ளமை அரச சாட்சியின் பொறுப்பற்ற தன்மையேயாகும் எனக் குறிப்பிட்டு.

அரச சாட்சியான பயங்கரவாதத் தடைப்பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் எஸ் எல்.ஏ.ரணசிங்கவை கைது செய்து நீதிமன்றில் பாரப்படுத்தும்படி நேற்றுப் பிடியாணை பிறப்பித்ததுடன் பிடியாணையை உடனடியாக செயற்படுத்தும்படி பொலிஸாருக்கு கட்டளை இட்டு மேலதிக விசாரணையை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (இ-3)

# விஜயதாஸவின் பதவி நீக்கத்துக்கு ரவி விவகாரமே காரணம் – டளஸ்

(கொழும்பு)

நீதி அமைச்சராக இருந்த விஜயதாஸ ராஜபக்ஷவின் பதவி நீக்கத்திற்கு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் விவகாரமே காரணம் என கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தேர்தல்கள் திணைக்களத்திற்கு நேற்றுமுன்தினம் சென்றிருந்தபோது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் பதவியில் நேற்று முன்தினம் முதல் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளதை சகலரும் அறிவர். அவர் ஊழலில் தொடர்பு பட்டிருந்தார். மோசடி செயற்பாடுகளை முன்னெடுத்தார். அரச சொத்துக்களை சேதம் செய்தார் அல்லது அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பதவி விலக்கப்பட வில்லை. 2 காரணங்களே அவரின் பதவி நீக்கத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளன. முதலில் அவர் மீது எப்போது குற்றச்சாட்டு முன்வைக் கப்பட்டது என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க பதவி விலகிய பின்பே முன்வைக்கப்பட்டது.

மேலும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் குறித்தும் மேற்படி விவகாரத்தின் பின்பே பேச்சுக்கள் எழுந்தன.

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் விவகாரத்தின் பின்பே நீதி அமைச்சருக்கு அழுத்தம் வரத் தொடங்கியது.

இந்த நாட்டில் தற்போது சட்டத்தின் ஆட்சி இல்லாமையே சகலதுக்கும் காரணமாகின்றது. இதற்கு முன்னர் பிரதம நீதியரசராக இருந்த மொஹான்பீரிஸையும் தற்போதைய அரசாங்கம் இவ்வாறுதான் விலக்கியது.

அதன் பின்னர் சட்டமா அதிபரான யுவஞ்சன் மீது அரசாங்கம் சேறு பூசியதால் அவரும் விலகிச் சென்றார். அவரின் பதவிக்கு அவருக்கு அடுத்த மட்டத்தில் இருப்பவரை விடுத்து மூன்றாம் நிலையில் இருப்பவரை பதவியில் அமர்த்தினார்கள்.

நள்ளிரவு 12 மணி வரையில் வழக்கு விசாரணை இடம்பெற்றது. சனிக்கிழமையிலும் கூட நீதிமன்றங்களில் வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

அதனால் நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து தற்போதாவது மக்கள் கண்விழித்து பார்க்க வேண்டும். அப்போது தான் அரசாங்கம் சதிச் செயற்பாடுகளை முன்னெடுப்பது மக்களுக்கு தெரியவரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சாஸ்திரங்கள்

✦ தமிழ் வருடக் கடைசியில் 15 நாளும் ஒவ்வொரு மாதக் கடைசியில் 3 நாளும் ஆகுலம் எனப்படும். இந்த நாட்களில் சுப காரியங்கள் செய்தல் கூடாது.

-பெரிய வருஷாதி நூல்



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### இந்த உலகம் உனக்குச் சொந்தம்

இந்த 4-6 அடி உலகில் மகிழ்ச்சி அல்லது வேதனை ஆழமான உணர்ச்சிகள் ஆகும். நாம் அவற்றில் சிக்கிக் கொள்ளாவிட்டால் " நான் உன்னைச் சேர்ந்தவன்" என்று நாம் மனமார உண்மையாகச் சொல்லலாம். உன்னுடைய ஏக்கப் பேராவல், வெறுப்புக்கள், ஆசைகள், சந்தேகங்கள் அற்றுவிடும். ஒரு கணத்தில் இந்த உலகம் உனக்குச் சொந்தம்.

நான், நான், நான் " எனக்கு இது வேண்டும், இதை நான் விரும்புகிறேன். இது எனக்குப் பிடிக்கவில்லை" என்பதைச் சுற்றித்தான் உன்னுடைய துன்பங்களெல்லாம் உள்ளன.


எல்லாவற்றையும் விட்டுவிடு, சூரியன் உதித்து மறைகிறான், புல் வளர்கிறது, நதி ஓடுகிறது, நிலவு ஒளி வீசுகிறது, நான் (ஆத்மா) இங்கே என்றென்றைக்கும் இருக்கிறேன்.

உன்னை யாராவது புகழ்ந்தால் நீ எப்படி உணருகிறாய்?

பதில்கள்: வெட்கம், மகிழ்ச்சி,பெருமை, திகைப்பு.

ஸ்ரீஸ்ரீ:அது உன்னை என்னவோ செய்கிறது, இல்லையா? ஆனால் அது என்னை ஒன்றும் செய்வதில்லை! நிலவு, மலைகள், ஏரி, காடு இவற்றைப் புகழ்ந்தால், புகழ்ச்சி அவற்றை ஒன்றும் செய்வதில்லை. அவை எந்த மாற்றமுமில்லாமல் அப்படியே உள்ளன. நானும் இயற்கையின் ஒரு பாகம். என்னைப் புகழ்வது உனக்கு மகிழ்ச்சியாக இருந்தால் என்னைப் புகழ். உண்மையில் உனக்கு வேறு வழியில்லை!

நீ விரும்பப்படுபவைகளை என்னிடம் செய்யலாம். நான் உனக்காக இருக்கிறேன், நான் உன்னுடைய பொம்மை!




### எல்லோரிடமும் அன்பு காட்டுக!

✦ படைப்புகள் அனைத்தும் இறைவனின் குடும்பம். படைப்புகளுக்கு நன்மை புரிபவரே இறைநேசத்திற்கு உரியவர்.

✦ நீங்கள் அன்பு செலுத்தாதவரை இறை நம்பிக்கையாளராக முடியாது. அன்பு என்பது உங்கள் உறவினர் மீது மட்டும் செலுத்தப்படுவது அல்ல. அன்பு அனைவர் மீதும் செலுத்தப்படுவதாகும்.

✦ இறைநம்பிக்கையாளன் நேசத்தின் சிகரமாவான். மக்களை நேசிக்காதவனிடமும், மக்களால் நேசிக்கபபடாதவனிடமும் எந்த நன்மையும் இல்லை.

✦ உங்களுக்கு விரும்புவதையே பிறருக்கும் விரும்பாத வரையில் நீங்கள் உண்மையுள்ள இறை நம்பிக்கையாளர் ஆக முடியாது.

✦ நெருப்பைத் தண்ணீர் அணைத்து விடுவது போல செய்கின்ற தர்மம் பாவங்களை அழித்து விடுகின்றது.

✦ இறைவனிடம் பாவமன்னிப்பைக் கோருங்கள். நான் ஒரு நாளைக்கு நூறுமுறை மன்னிப்பைக் கோருகிறேன். ஒருவன் குர்ஆனை மனனம் செய்து மறந்துவிடுவது பாவத்தின் காரணமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் சனசமூக நிலையம் நடத்திய தீவக ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி







**அண்ணா சம்பியன்**







சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலையமும் திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தீவக ரீதியிலான அணிக்கு 9 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஊர்காவற்றுறை அண்ணா வி.கழகம் சம்பியனாகியது. அண்மையில் நடைபெற்ற சென்.ஜேம்ஸ் அணி நயினாதீவு அண்ணா வி.க.அணியினை எதிர்கொண்டு 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கால் இறுதிக்கு தெரிவாகியது.

அதில் ஊர்காவற்றுறை ஞான ஒளி வி.க.அணியினை எதிர்கொண்டு போட்டி சமநிலையில் முடிவுற்றது.

அதனால் தண்ட உதை மூலம் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

அரையிறுதியில் புங்குடுதீவு பாரதி வி.க.அணியினை எதிர்கொண்டு 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் ஊர்காவற்றுறை அண்ணா வி.க. அணியினை சென். ஜேம்ஸ் அணி எதிர்கொண்டது. பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் ஊர்காவற்றுறை அண்ணா அணி சம்பியனாகியது. (க)

## கனெக்டிகட் ஓபன் டென்னிஸ் போட்டி ராட்வன்ஸ்கா கால் இறுதிக்கு தகுதி



கனெக்டிகட் ஓபன் டென்னிஸ் போட்டியின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அக்னிஸ்கா ராட்வன்ஸ்கா (போலந்து) கனடா வீராங்கனை பவுச்சர்டை வீழ்த்தி கால் இறுதிக்கு தகுதி பெற்றார்.

கனெக்டிகட் ஓபன் டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் உள்ள நியூஹெவன் நகரில் நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 2 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகத் தர வரிசையில் 10ஆவது இடத்தில் இருக்கும் அக்னிஸ்கா ராட்வன்ஸ்கா (போலந்து) 6-3, 7-5 என்ற நேர்செட்டில் வைல்டு கார்டு மூலம் பங்கேற்ற கனடா வீராங்கனை பவுச்சர்டை வீழ்த்தி கால் இறுதிக்கு தகுதி பெற்றார். இந்த வெற்றியைப் பெற அவருக்கு 45 நிமிடமே தேவைப்பட்டது.

மற்றொரு ஆட்டத்தில் சீன வீராங்கனை பெங் ஹுய் 6-2, 6-3 என்ற நேர் செட்டில் குரோஷியாவின் மிர்ஜனா லூசிச் பரோனியை தோற்கடித்து கால் இறுதிக்குள் நுழைந்தார். கால் இறுதியில் ராட்வன்ஸ்கா-பெங் ஹுய் மோதுகிறார்கள். மற்ற ஆட்டங்களில் டாரியா காவ்ரிலோவா (அவுஸ்திரேலியா), எலிசெ பெர்டென்ஸ் (பெல்ஜியம்) ஆகியோர் வெற்றி பெற்று கால் இறுதிக்கு தகுதி பெற்றனர். (க)

## மகாலிங்கம் ஞாபகார்த்த கிரிக்கெட் ஜொனியன்ஸ் அணி வெற்றி

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் மகாலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான இருபது-20 தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஜொனியன்ஸ் அணி வெற்றி பெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து றெயின்போ அணி மோதியது.



முதலில் துடுப்பெடுத்தாடிய றெஜின்போ விளையாட்டுக்கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக றஜீவ் 43 ஓட்டங்களையும் செந்தூரன் 19 ஓட்டங்களையும், யதுர்சன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் லவேந்திரா 2 இலக்குகளையும் பிரிந்தாபன், யதுசன், டக்சன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

104 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 13 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து வெற்றி பெற்றது. கிசாந்துயன் 42 ஓட்டங்களைப் பெற்றார். (க)

## அன்ரனிஸ் வெற்றி


புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இத்தொடரில் 22.08.2017 அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் சென்.அன்ரனிஸ் வி.க. எதிர்த்து சென்யூட் வி.க.அணி போட்டியிட்டது. இதில் சென். அன்ரனிஸ் வி.க. 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. (க)



கரிதாஸ் கியூடெக் சமாதானமும் நல்லிணக்கமும் நிகழ்ச்சித் திட்ட ஏற்பாட்டில் அண்மையில் நடத்தப்பட்ட மென்பந்து சுற்றுப் போட்டியில் மாதகல் விநாயகர் விளையாட்டுக்கழகம் இரண்டாமிடத்தை பெற்றது. அவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு (22.08.2017) அன்று [illegible] விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற போது. (க)

## கப்டன் பதவியிலிருந்து டிவில்லியர்ஸ் விலகல்



ஒரு நாள் கிரிக்கெட் அணியின் கப்டன் பொறுப்பில் இருந்து டிவில்லியர்ஸ் விலகுவதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்க ஒருநாள் கிரிக்கெட் அணியின் கப்டன் டிவில்லியர்ஸ் காயம் காரணமாக கடந்த சில மாதங்களாக ஓய்வில் இருந்து வருகிறார்.

அவர் விரைவில் 3 வகை யான போட்டிக்கு களம் திரும்ப இருப்பதாகவும், அதேநேரத் தில் ஒருநாள் போட்டி அணி யின் கப்டன் பொறுப்பில் இருந்து 33 வயதான டிவில்லியர்ஸ் விலகுவதாகவும் தென்னாபிரிக்க கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பு எழுதிய...

எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் அலுவலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

தென்னிலங்கையில் வெளிவரும் ஆங்கில ஊடகங்களில் இதே விடயம் குறித்து செய்திகள் வெளிவந்திருந்தது. அதாவது மீள்குடியேற்றம் முக்கியமாக கேப்பாபுலவு விடுவிப்பு தொடர்பாக கோரியுள்ளதாகவும், தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு புதிய அரசியல் அமைப்பில் கொண்டுவரவுள்ளதாகவும் அதாவது தமிழ் மக்களின் எதிர்கால பிரதிநிதித்துவம் தொடர்பான விடயங்களுக்கு தீர்வு காணப்படுவது என்பது புதிய அரசியல் அமைப்பு திருத்தங்களில் தங்கியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக அதிகார பகிர்வு தொடர்பாக மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் உரிய அதிகாரம் சம்பந்தப்பட்ட விடயங்கள், முக்கியமாக 13ஆம் திருத்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள அதிகாரங்களை கொடுக்கும் நோக்குடன் இணக்கம் கண்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பால் அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட கடிதம் தமிழ் ஊடகங்களுக்கு உத்தியோக பூர்வமாக வெளியிடப்படவில்லை. அதில் உள்ள கருத்துக்குள் வெறுமனே மேலோட்டமாக தெரிவித்துள்ளனர். அரசு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ளவில்லை என்ற தொனியில் செய்திகளை வெளியிட்டுள்ளார்கள். ஆனால் தென்னிலங்கையில் வெளிவரும் ஆங்கில ஊடகங்களில் ஆணித்தரமாகவும் தெளிவாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதாவது 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் புதிய அரசியல் அமைப்பில் ஒரு சில திருத்தம் கொண்டுவரவுள்ளதாகவும் அந்த திருத்தங்களை கொண்டுவந்து நிலைநாட்டும் வகையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்ற வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள்.

அத்துடன் குறித்த கடிதத்தினை உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை, அதில் உள்ள கருத்துக்களை மேலோட்டமாக தீர்வு சம்பந்தப்பட்ட விடயம், அன்றாட வாழ்க்கை பிரச்சினைகள், தொடர்பில் சர்வதேசம் தலையிட வேண்டும் என்ற நோக்கில் தென்னிலங்கை மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் கருத்துக்களை கொடுத்துள்ளார்கள்.

நிபந்தனை இல்லாத ஆதரவை கொடுத்து இந்த ஆட்சியை கொண்டுவந்தது மட்டுமல்லாமல், இந்த அரசானது ஒற்றையாட்சிக்குள் தீர்வு, பொறுப்புக்கூறல் தொடர்பாக இராணுவத்துக்கு எதிராக நடவடிக்கை இல்லை என்று ஆணித்தரமாக கூறிவரும் நிலையில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவம் அரசை காப்பாற்றும் நிலையில்தான் செயற்பட்டது. அத்துடன் உள்ளக விசாரணைக்கு தீர்மானத்தை கொண்டுவர தமிழ் தேசிய கூட்டமைப்பு இணங்கியது. மற்றும் ஒற்றை ஆட்சிக்குள் தீர்வுக்கு இணங்கியதாக சர்வதேச நாடுகளுக்கு சொல்லியிருப்பதை நாம் பல தடவைகள் மக்களுக்கு தெரிவித்து வந்துள்ளோம்.

தமிழ் மக்கள் கண்ணுக்கு முன்னால் ஏமாற்றப்பட்டிருக்கும் நிலையில் கூட தமிழ் தேசிய கூட்டமைப்பானது உண்மைகளை தமிழ் மக்களிடம் மறைத்து சிங்கள மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் உண்மையை தெரிவித்துள்ளார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு மிக முக்கிய கட்டத்தில் சர்வதேசத்துக்கு கடிதம் ஒன்றை எழுதுவதாக இருந்தால் அதை உத்தியோக பூர்வமாக வெளியிட்டிருக்க வேண்டும். முழுமையான கடிதம் வெளிவந்திருக்க வேண்டும்.

அதை விடுத்து ஒற்றை ஆட்சிக்குள் தீர்வு என சிங்கள மக்கள் மத்தியிலும், ஒற்றை ஆட்சி, 13ஆம் திருத்த சட்டத்தை மூடி மறைத்து, அரசியல் அமைப்பு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருப்பதாகவும் அதை கொண்டுவருவதற்கு அரசாங்கம் பின்வாங்குவதாகவும் குறிப்பிடுவது மீண்டும் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றுவதுடன், சர்வதேசத்திடம் இருந்து இந்த அரசை காப்பாற்றும் நோக்கத்துடன் செயற்படுவது மட்டும்தான். நடைபெறுகிறது.

ஏற்கெனவே இருக்கும் 13ஆம் திருத்த சட்டத்தை கொண்டுவருவதற்கு சர்வதேசத்தை தலையிடுமாறு கோருவது எதற்காக? ஏன் அதை கோருகிறார்கள்?

இது தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு சர்வதேசத்தை தலையிடுமாறு கேட்கவில்லை. இந்த அரசுக்கு ஒரு நெருக்கடியை கொடுப்பதற்காக இச் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளார்கள்.

இந்த அரசு சீனாவுக்கு இடம் கொடுத்து வரும் நிலையில், இந்த அரசின் இச் செயற்பாடு இந்த அரசை கொண்டு வந்த இந்தியா, மற்றும் மேற்கு நாடுகளுக்கு ஏமாற்றமாக இருக்கும் நிலையில் அரசானது சீனாவின் பிரச்சினையில் இருந்து விடுபட வேண்டும் என்ற செய்தியை அரசுக்கு கொடுக்க வேண்டும் என கூறுவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு சர்வதேச தலையீட்டை கோரியுள்ளது.

தென்னிலங்கை ஊடகங்கள் வெளியிட்டுள்ள கருத்து பொய்யாக இருந்தால் உண்மையான கருத்தை முழுமையாக வெளியிட வேண்டும் என சவால் விடுகிறோம்.

இந்த சர்வதேச தலையீடு தொடர்பான விடயம் முதலாவதாக சீனா சம்பந்தப்பட்ட விசயத்தில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் தேவை உள்ளது. அல்லாது தமிழ் தேசிய கூட்டமைப்பு தேர்தல் வரப்போகிறது என்பதற்காக மக்களை மீண்டும் ஏமாற்றுகிறார்கள். அதற்கான பொய்யான பிரசாரம் தான் இது என மேலும் தெரிவித்தார். (மு-9)

## சுமுகமாக நடந்தது...

றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலக கட்டடத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இந்த அமர்வில் வடக்கு மாகாண சபையில் புதிதாக பொறுப்பேற்று கொண்ட அமைச்சர்கள் அனைவரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதே போன்று அமைச்சர்களாக இருந்து பதவி விலகியவர்களும், பதவி விலக மறுத்து பதவி நீக்கப்பட்ட அமைச்சர்களும் கலந்து கொண்டிருந்தனர். எனினும் எந்த மோதல்களும் இன்றி அமைதியான முறையில் நடைபெற்றது. எனினும் உறுப்பினர் பசுபதிப்பிள்ளை வவுனியாவில் வனவள திணைக்களத்தால் மூடப்பட்ட கிணறை வடக்கு மாகாண முதலமைச்சர் தலையிட்டு மீண்டும் அதனை தோண்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்,

என கோரி அனைத்து உறுப்பினர்களையும் எழுந்து நிற்குமாறு கோரினார். எனினும் உடனடியாக தலையிட்ட அவைத்தலைவர் சிவஞானம் முதலமைச்சர் இங்கு தான் உள்ளார். எழுந்து நின்று ஒன்றும் செய்ய தேவையில்லை. சாதாரணமாகவே கூறுங்கள். அவர் நடவடிக்கை எடுப்பார் என கூறினார். இவ்வாறு அவைத்தலைவர் சபையில் எந்த குழப்பங்களும் இல்லாமல் நடத்தி சென்றார்.

முதலமைச்சரின் தற்துணிவு அதிகாரத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் நேற்றைய அமர்வில் சமுகமளித்திருந்த நிலையில், சபை சுமூகமாகவே நடைபெற்றது. எனினும் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் சுகாதார அமைச்சின் ஆலோசனை குழுவில் இருக்க விரும்பவில்லை என அவைத் தலைவருக்கு அறிவித்திருந்தார். மேலும் புதிய அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் உரியவர்கள் அமர்ந்து கொண்டனர்.

பதவி நீக்கப்பட்ட அமைச்சர் டெனீஸ்வரனும் தாமாகவே அமைச்சர்களுக்கு உரிய இருப்பிடத்தை விட்டு தானாகவே வேறு ஒரு ஆசனத்தில் அமர்ந்திருந்தார். இந்த நிலையில் எதிர்வரும் ஏழாம் திகதி சபை அமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த அமர்வில் நேற்றைய தினம் சிவாஜிலிங்கத்தால் கொண்டுவரப்பட்ட கடமை நிறைவேற்று அதிகாரிகளுடைய நியமனம் தொடர்பான விடயங்கள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக அவைத்தலைவர் அறிவித்தார். (மு-4)

## மனித உரிமை...

படுத்திக் காட்டிய விடயங்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வெளிப்படுத்த வேண்டும் எனவும் இலங்கை அரச முகவர்களால் உறுதியளிக்கப்பட்ட தண்டிப்பு நல்லிணக்கம் மற்றும் உண்மையை கண்டறிதல் போன்ற விடயங்களில் இலங்கையின் நிகழ்ச்சி நிரலில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு நீதி, உண்மையை கண்டறிதல், சர்வதேச தரநிர்ணயங்களுக்கேற்ப இலங்கை செயற்பட்ட விதம் என்பவற்றுக்கு இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிதிசார் உதவிகள் என்ன என்பது தொடர்பிலும் ஆராயப்படவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

மேலும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் முகவர்கள் இலங்கையில் மேற்கொண்ட கண்காணிப்பு மற்றும் செயற்படுத்தல் செயற்பாடுகளின்போதும் பயிற்றுவித்தல் செயற்பாடுகளின்போதும் இலங்கை உறுதியளித்த விடயங்களை எந்தளவுதூரம் செயற்படுத்தி காட்டியுள்ளது என்பது தொடர்பிலும் ஆராய வேண்டும்.

மேலும் இலங்கையின் மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களுக்கு சட்ட உதவிகளை பெறுவது தொடர்பிலும் சர்வதேச நியமங்களுக்கேற்ப செயற்படுத்தப்பட்ட விடயங்களை ஆராய்வதற்கெனவும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (மு-11)

# உயர்தர பொது அறிவு பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 2ஆம் திகதி இடம்பெறவிருந்த க.பொ.த உயர்தர பரீட்சையின் பொது அறிவு பாடத்தின் பரீட்சையை அடுத்த நாள் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

எதிர்வரும் 2ஆம் திகதி முஸ்லிம்கள் ஹஜ் பெருநாள் தினத்தை கொண்டாடுவதால், அன்று இடம்பெறவிருந்த குறிப்பிட்ட பாடத்திற்கான பரீட்சையை, பிற்போடுமாறு அமைச்சர் றிஷாட் பதியுதீன், எழுத்து மூலம் விடுத்த வேண்டுகோளை ஏற்று தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக அமைச்சர் தெரிவித்தார். (மு-11)

# காமினி ஜயவிக்ரம பெரேரா புதிய நீதியமைச்சராக

(கொழும்பு)

நீதி மற்றும் புத்த சாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்காக நிலையான அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா இன்று பதவிப் பிரமாணம் செய்து கொள்ள உள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை நிறைவேற்றத் தவறிய குற்றச்சாட்டிற்காக விஜயதாஸ ராஜபக்ஷவை அவரின் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதி நேற்று முன்தினம் ஏற்றுக் கொண்டிருந்தார்.

அதன்படி இதுவரை வகித்த அமைச்சுப் பதவிகளில் இருந்து விஜயதாஸ ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் முதல் நீக்கப்பட்டுள்ளார்.

புதிதாக அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட உள்ள காமினி ஜயவிக்ரம பெரேரா ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராவார்.

1977ஆம் ஆண்டு ஜே.ஆர் ஜயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடன் பாராளுமன்றத்திற்கு சென்ற அவர், தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலருள் அவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-11)

# கிளிநொச்சியில் வாள்வெட்டு 2 இராணுவத்தினர் காயம்

(கிளிநொச்சி)

இடப்பக்க கைகளில் வெட்டுக்காயங்களுக்கு இலக்கான நிலையில் நேற்றிரவு கிளிநொச்சி ஊற்றுப்புலத்தை சேர்ந்த இரண்டு தமிழ் இராணுவத்தினர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்

குறித்த வெட்டுச் சம்பவம் ஊற்றுப்புலம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில் மேலதிக தகவல் எவையும் கிடைக்கப்பெறவில்லை. (மு-312)

## அமைச்சர் ராஜித...

டளஸ் அழகப்பெரும, காஞ்சன ஹேரத், பந்துல குணவர்தன, விமல் வீரவன்ச, மகிந்தானந்த அளுத்கமகே, நாமல் ராஜபக்ஷ, காஞ்சன வீரசேகர, ஜயந்த சமரவீர, தாரக பாலசூரிய, வீரகுமார திஸாநாயக்க, கீதா குமாரசிங்க உட்பட 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ளனர். (மு-11)

## குடும்பப்பெண்...

னின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் கொக்குவில் கிழக்கினை சேர்ந்த விஜய ரஞ்சன் ரஞ்சினி (வயது 54) என்ற ஒரு பிள்ளையின் தாயே உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் தீக் காயங்களுக்கு உள்ளான நிலையில யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

சடலமானது பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (மு-9,30)

## இளைஞர் ஒருவர்...

வில் புதிய செம்மணி வீதி ஆனந்தபுரம் அரியாலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினை சேர்ந்த சதீஸ் பிரியதர்சன் (வயது 21) என்ற இளைஞனே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (மு-30)

## தேர்தல் திருத்த...

அது அங்கீகரிக்கப்படுமானால் மாத்திரமே கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு முன்னர் தேர்தலை நடத்த முடியும் என்று ஜேவிபி விளக்கமளித்துள்ளது.

இதனையடுத்து இன்றைய தினம் வாக்கெடுப்பை நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை நூலகம்

## பேரறிவாளனுக்கு...

நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள பேரறிவாளனை பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பேரறிவாளனை பிணையில் செல்ல அனுமதிப்பதற்கு தமிழக அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

இதன்படி பேரறிவாளனின் தாயாரின் கோரிக்கையை ஏற்று இவரை ஒரு மாதம் பிணையில் செல்ல தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்கான அரசாணை தற்போது வேலூர் சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தனது மகனுக்கு பிணை கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து பேரறிவாளனின் தாயார் தொடர்ந்து பல போராட்டங்களை முன்னெடுத்து வந்தார். இதற்கு பல தரப்பிலிருந்தும் ஆதரவு கிடைத்தன.

அந்த வகையில் தற்போது பேரறிவாளனுக்கு 26 வருடங்களுக்குப் பிறகு ஒருமாத காலம் பிணை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த ஒரு மாதகாலம் அவர் பொலிஸ் பாதுகாப்பில் இருப்பார்.

கடந்த 1991ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்திற்கு வந்த ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார்.

இந்த கொலை வழக்கில் சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ரொபர்ட் பயாஸ், ஜெயகுமார், ரவிச்சந்திரன் ஆகிய 7 பேருக்கும முதலில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.(மு-11)

## சுன்னாகத்தில் ரயில்...

யத்தை அண்மித்துச் சென்றுகொண்டிருந்த பொழுது புகையிரதப் பாதையில் நின்ற இளைஞன் ஒருவருடன் மோதுண்டதில் குறித்த இளைஞனின் தலை துண்டிக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் பலியானவர் சரவணன் இராமச்சந்திரன் (வயது34) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்து நடைபெற்ற இடத்திற்கு இருபுறத்திலும் கடவைகள் இருக்கின்ற போதும் கடவையை பாவிக்காமல் கடக்க முயன்றதினால் விபத்து இடம்பெற்றிருக்கலாம். அல்லது தற்கொலை முயற்சியாகக் கூட இருக்கலாம் என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர்

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-30-104-312)

## வடக்கு முதல்வரின்...

உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டு அது தொடர்பில் என்ன முடிவை மத்திய அரசுக்கு அறிவிப்பது என யோசனை முன்வைக்கப்பட்டது.

எனினும் குறித்த சட்டமூலம் தொடர்பில் ஆராய்வதற்கு சிறப்பு அமர்வு ஒன்று கூட்டப்படவுள்ளதாக அவைத்தலைவர் அறிவிப்பு செய்தார். குறித்த சட்டமூலம் அனுப்பி வைக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் முடிவு அறிவிக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் கேட்டதற்கு அமைவாக, எதிர்வரும் நான்காம் திகதி அன்று குறித்த சட்டமூலம் தொடர்பில் ஆராய முடியும் என கூறினார்.

இதன் போது கருத்து தெரிவித்த முதலமைச்சர். இந்த சட்டமூலம் எங்கள் அதிகாரங்களை பறிக்கும் சட்டமூலமாக உள்ளது. எங்கள் அதிகாரங்களை பாராளுமன்றம் எடுத்து கொள்ளும் முயற்சியாகவும் உள்ளது.

எனவே இதனையும் எங்கள் உறுப்பினர்கள் மனதில் வைத்து கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார். இதற்கு அவைத்தலைவரும் சம்மதம் தெரிவித்து கொண்டார்.

இதேவேளை அரசியலமைப்பின் 20-வது திருத்தச்சட்ட மூலம் ஊவா மாகாணத்தில் நேற்றைய தினம் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில். வடக்கு முதலமைச்சரின் இந்த அறிவிப்பு மைத்திரி. ரணில் தலைமையிலான மத்திய அரசுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(மு-4)

## நாவாந்துறை இளை...

ந்ததுடன், அதே இடத்தை சேர்ந்த பிரிந்தா (வயது 24). எஸ். சுரேக்கா (வயது 24). எஸ்.டயானா (வயது 24). சந்திரலேகா (வயது 31) மற்றும் சிரோமி (ஒன்றரை வயது) ஆகியோரே நீரில் இருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வெளிநாட்டில் வசிக்கும் நாவாந்துறையைச் சேர்ந்த குடும்பம் ஒன்று விடுமுறையை கழிப்பதற்காக தமது கிராமத்துக்கு வந்துள்ளனர். இவ்வாறு வந்தவர்களே நேற்றைய தினம் மாலை யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரை வழியாக குருசடிதீவு அந்தோனியார் ஆல்யத்தை நோக்கி ஒரு படகில் 6 பேர் சென்றுள்ளனர்.

பண்ணை பாலத்தை படகு கடக்க முற்பட்ட போது படகு இயந்திரத்தின் வலுவை படகோட்டி குறைத்துள்ளார். இதன்போது எதிர்பாராத விதமாக படகு இயந்திரம் செயலிழந்துள்ளது. அத்துடன் கடலின் நீரோட்டம் வேகமாக இருந்த காரணத்தினால் படகு கவிழ்ந்ததில் அந்த படகில் இருந்த ஆறு பேரும் கடலில் வீழ்ந்து தத்தளித்துள்ளனர்.

அப்போது அப்பகுதியில் மீன்பிடித் தொழில் ஈடுபட்டிருந்தவர்கள் உடனடியாக அப்பகுதிக்கு வந்து கடலில் மூழ்கியவர்களை காப்பாற்றியுள்ளனர்.

ஆனால் அவர்களில் ஒருவரை அதாவது படகை செலுத்தி வந்தவரை அலை அடித்து சென்றுள்ளது. அவரை தேடும் நடவடிக்கையை தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்த போது சிறிது நேரத்தின் பின்னர் அவரின் உடல் குருசடிதீவு கரைக்கு அருகில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அவருடன் பயணித்த ஏனையவர்கள் நீரில் இருந்து மீட்க்பட்டு உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பண்ணைப் பாலத்தின் கீழ் கவிழ்ந்த படகு சுமார் ஒரு கிலோ மீற்றர் வரை கடலினுள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

உயிரிழந்த இளம் குடும்பஸ்தர் கடந்த மாதமே திருமண பந்தத்தில் இணைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் நாவாந்துறை பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (மு-4-9-30)

## அரசியல் கைதிகளின்...

சியல் கைதிகளான யாழ்ப்பாணத்தை சேர்ந்த இராசதுரை திருவருள் (வயது 40), கரணவாயை சேர்ந்த மதியரசன் சுலக்ஸன் (வயது 30), நாவலப்பிட்டியை சேர்ந்த கணேசன் தர்சன் (வயது 26) ஆகியோருக்கு கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து வவுனியா நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகிறது.

குறித்த வழக்கு நிறைவடையும் நிலையில் இந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களம் தெற்கில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரி கடந்த 20 ஆம் திகதியில் இருந்து தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

5 ஆவது நாளாகவும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த இவர்களில் இராசதுரை திருவருள் மற்றும் மதியரசன் சுலக்ஸன் ஆகியோர் உடல்நிலை கடுமையாக பாதிக்கப்பட்டு நேற்றைய தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இதில் கணேசன் தர்சன் என்பவர் மரணதண்டனை கைதிகளின் அறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

எந்த நிலையில் இருந்தாலும் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து தமது வழக்குகள் வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றக்கூடாது என தமக்கு உறுதிமொழி வழங்கும் வரை போராட்டத்தை தொடரவுள்ளதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர். (மு-9)

## பயிற்சியின் போது...

பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கண்டி திலாவத்துறை தொஹகமுவ பகுதியை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான அக்ரம் அம்பேகெதர மஞ்சுள கேரத் பண்டார என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

காங்கேசன்துறை கடற்படை முகாமில் கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த குறித்த வீரர் திடீரென மயங்கி விழுந்துள்ளார். விழுந்த இவர் பேச்சு மூச்சின்றி காணப்பட்டதால் உடனடியாக காங்கேசன்துறை கடற்படை முகாம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

கோமா நிலையில் இருந்த இவர் நேற்றைய தினம் காலை 10 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவருடைய மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (மு-9-30)


அண்ணா அன் கோ வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500 (C-9407)

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் ஊடாக அனுப்பிடவும்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9382)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப CANADA - 400/= மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

PASSPORT

வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION FOR FOREIGN PASSPORT (வீசா எக்ஸ்ரென்சன்) (C-9383)

0768227499 VISA

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

வட இந்திய காசி யாத்திரை

10 நாள் (வயதானவர்களுக்கான யாத்திரை)

நாட்கள்: 10 ஆரம்பம் 15.09.2017

செல்லும் இடங்கள்: டெல்லி, நாராயணசுவாமி கோவில், ஆக்ரா, தாஜ்மஹால், மதுரா, கிருஸ்ணஜென்மபூமி, பிரேம்மந்திர் பிரமாண்டமான கிருஷ்ணர் கோவில், செங்கோட்டை, காசி (வாரணாசி 2 நாள்), கயா காலமானவர்களுக்கு பிதிர்க்கடன் செய்யுமிடம், புத்தகயா (புத்தலாயங்கள்), அலகாபாத் (கங்கா, யமுனா, சரஸ்வதி திருவேணி சங்கமம், சீத்தாமடி (சீதை தாயாருடன் பூமிக்குள் புதையுண்ட இடம்), இராமேஸ்வரம், நவபாஷாணம், உத்திரகோஷமங்கை, திருப்புலானி, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரத் தரிசனம், சென்னையில் 01 நாள் சொப்பிங், அப்துல் கலாமின் மணிமண்டபமும் காணலாம்.

பெற்றுக்கொள்ளும் ரூபாயிக்கு எமது சேவை

4 விமான டிக்கெட், மடப்பள்ளி ஆட்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு மூன்று வேளை, கோப்பி, ரீ, (மினரல் வோட்டர்) குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள், யாத்திரை முழுவதும் A/C வாகன வசதி, கொழும்பிலிருந்து எயார் போட் போக வர வாகன வசதி, மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து 10 பேர் வந்தால் யாழ்- கொழும்பு- யாழ் வாகன ஒழுங்கு செய்து தரப்படும்.

பிராமண சமையல் ஆட்கள், சமைப்பதால் பிராமண சமூகத்தினர் தயக்கமின்றி கலந்து கொள்ளலாம். விபரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்

No: 59,3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11

T.P: 077 768 0102, 077 736 2154

Facebook: sridevisriranganathanthuraiappa

(C-9360)

புதியபிரிவுகள்ஆரம்பம்

தொழிற்துறைக் கணக்காளர்கற்கைநெறிகள்

aat [ Sri Lanka]

[AA1, AA2, AA3]

Qualification:- G.C.E. O/L 6 Passes

Medium – Tamil & English

வங்கியியல் கற்கைநெறிகள்

Banking Courses

IABF & DABF

(Tamil & English Medium)

Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths.

கணக்காளர்கற்கைநெறிகள்

Chartered Accounting Courses

Executive Level & Business level

(Tamil & English Medium)

Qualification:- G.C.E. A/L 3 Passes

Note :-2017 பரீட்சைஎடுத்தமாணவர்களும் பதிவுசெய்யலாம்.

(C-9409)

Students Awaiting (A/L) Results

Enrich your Proficiency in English

Certificate Course in English

15 Batches have successfully Completed the course Register your names before 31/08/2017.

Pharmacist (External)

G.C.E (O/L) ordinary Pass in English Language

G.C.E (A/L) ordinary Pass in three science subjects including chemistry.

Further Details: Jaffna College Undergraduate Dept. 464, Hospital Road, Jaffna. 0212223382 / 0212229149

கருத்தரங்குகள்

செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள SLAS பரீட்சைக்கான வகுப்புக்கள் பிரதி ஞாயிறு 9.00 - 4.00 எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள் மட்டும். நாள் ஒன்றுக்கான கட்டணம் 300/=

வட மாகாண ஆசிரியர் தெரிவு

ஞாயிறு 10.00 - 2.00

● சட்டமாணி நுழைவு

சுங்க பரிசோதகர் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு (யாழ்.நகர்)

(C-9425)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org